Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்கழி 20 வெள்ளிக்கிழமை (04.01.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 096













# பிரதம நீதியரசரை விசாரிப்பதற்கு தெரிவுக்குழுவிற்கு அதிகாரமில்லை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இல்லையென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தாக்கல்செய்த 2 மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 78(ஏ) ஒரு சட்டமல்ல. எனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எந்தவிதமான சட்ட அதிகாரமும் இல்லை. ஆகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு நீதிபதியொருவரை குற்றவாளி எனத் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கொண்டதல்ல.

நீதி பரிபாலன அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பால் மட்டுமே நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முடியும். இந்த வழிமுறை பின்பற்றப்படவில்லையெனில் நாட்டின் மொத்த நீதித்துறையின் அதிகாரத்திற்குமே பாரிய அச்சுறுத்தல் ஏற்படுமெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் மேலும் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது பல்வேறு முறைகேடு மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவர்மீது கண்டன பதவிநீக்க நடைமுறை ஒன்றை அரசாங்கம் கொண்டு வந்த நிலையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை வழக்கு விசாரணைகளை அவதானிப்பதற்காக ஜே.வி.பி.யின் விஜித ஹேரத், ஐ.தே.க.வின் கருஜயசூரிய, கூட்டமைப்பின் சுமந்திரன் உட்பட பலர் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

## அமைச்சர் யாப்பாவிற்கு தொலைபேசி மிரட்டல்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் அனுர பிரியதர்சன யாப்பாவிற்கு தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## மின்வயர் அறுந்து வீழ்ந்து இளைஞர் ஸ்தலத்தில் பலி

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை கிராமத்தில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவன் ஸ்தலத்தில் பலியாகியுள்ளான்.

புத்தாண்டு தினமான கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முல்லைத்தீவு சிலாவத்தையைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலை கல்விச் செயற்பாடு மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வு



(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக நேற்றைய தினம் விசேட கலந்துரையாடல் கொழும்பில் உள்ள உயர் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உயர் கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் செல்வி. வசந்தி அரசரட்ணம், பீடாதிபதிகள், யாழ் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர்

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற தீர்ப்பு குறித்து சபாநாயகர் விசேட உரை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பிலான நீதிமன்றின் தீர்ப்பு குறித்து சபாநயாகர் சமல் ராஜபக்ஷ விசேட உரையாற்றுவார் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாக உள்ளதாகவும், அந்தச் சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் சபாநாயகர் உரையாற்றுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேன்முறையீட்டு நீதிமன்றின் சட்ட விளக்கம் தொடர்பில் உன்னிப்பாக

19 ஆம் பக்கம் பார்க்க

## 2014 இல் ஐ.தே.க. ஆட்சி நம்பிக்கை கொள்ளும் ரணில்

(ரோம்)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் தேர்தலொன்றை நடத்துவதற்கான சூழல் நிலவுகின்றது. அந்தத் தேர்தலின் போது, நாட்டில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமொன்று உருவாகும் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ரணில்

19 ஆம் பக்கம் பார்க்க

## வல்லுறவின் பின் சிறுமி படுகொலை கண்டித்து மண்டைதீவில் பேரணி



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னர் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அப்பகுதி மக்களாலும் தீவக பொது அமைப்புக்களாலும் மண்டைதீவில் அமைதிவழி ஊர்வலமொன்று நேற்று நடத்தப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதனை உறுதிப்படுத்துமாறும்

19 ஆம் பக்கம் பார்க்க

## நாளைய தினமுரசில்...



# யாழில் புதிய கலாசார மண்டபம் இந்திய உதவியுடன் விரைவில்

இந்திய அரசாங்கத்தினால் யாழில் 12 கோடி ரூபாவில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு விரைவில் இடம்பெறுமென்று யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். யாழ். முற்றவெளி பகுதியில் 5 மாடிக் கட்டடத்தொகுதி அமைக்க தீர்மானித்த நிலையில், 5 ஆவது மாடியினை இந்திய அரசாங்கம் தமக்கு தருமாறு கோரியிருந்தது.

5 ஆவது மாடியினை வழங்க மறுத்தவேளை கலாசார மண்டபம் அமைப்பது குறித்தும், அதன் கட்டட தீர்மானங்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பின்னர் கலாசார மண்டபம் அமைக்க தீர்மானித்துள்ளனர்.

இதன்பிரகாரம் சில பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 5 மாடிக் கட்டடத்தினை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துக்கொண்டுள்ளது. அந்த நிலையில் விரைவில கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெறுமென்று அவர் கூறினார்.(02,25)

## மருதங்கேணி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமனம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமிய மருத்துவ மனைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்த இப்பதவிக்கு நேற்று முன்தினம் முதல டாக்டர் க.பிரதீபன் என்பவர் நிரந்தரமாக நியமிக்கப்பட் டிருக்கிறார். இதனால் இப்பகுதி மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது. (116)

## "சிவபூமி" அறக்கட்டளையின் கல்விக்கான நிதி உதவி

சிவபூமி அறக்கட்டளையினரால் இவ்வாண்டுக்கான கல்வி நிதியம வழங்கப்படவுள்ளது. விஞ்ஞானி கலாநிதி சதாசிவம் கனகசபை தம்பதிகளின் அறக்கொடை உதவியினால் பின்வரும் பாடசாலைகளுக்கு இந்நிதி வழங்கப்படும்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம் மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை விக்கினேஸ்வரா வித்தியாலயம், தொல்புரம் விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் சேர்.கனகசபை அ.த.க.பாடசாலை - பனனாலை. (137)

## விசமிகளின் நாசவேலைகள்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் உருவச்சிலை அமைந்துள்ள பாதுகாப்புச் சுவரின் ஒரு பகுதி விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அந்த மதில் சுவரை சேதமாக்கிய விசமிகள் அங்கு தங்கியிருந்து மது அருந்திவிட்டு வெற்றுப் பியர் கான்களை அங்கு விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த குருநகர் அண்ணா எம்.ஜி.ஆர் மன்றத்தின் தலைவர் அன்ரன் குருநகர் பகுதியினைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரே மது அருந்திவிட்டு இந்தச் செயலைப் புரிந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்திலும் தாம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் சில நாட்களுக்கு முன் இந்தப் பகுதி வர்ணம் பூசப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறு செயற்படும் விசமிகளைக் கைது செய்து பொலிஸார் தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக கொண்டுள்ளார். (பா)

## ஆமை பிடித்தவர் கைது

கடலில் சட்டவிரோதமாக ஆமை பிடித்ததாகக் கூறப்படும் மீனவரொருவர் பிடிக்கப்பட்ட ஆமையுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சட்டவிரோதமாக கடலில் ஆமை பிடித்ததாகக் கூறப்படும் இம் மீனவர் பிடிக்கப்பட்ட ஆமையுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இம் மீனவர் பூநகரி கடற்பரப்பில் நேற்று வியாழக்கிழமை காலை கலங்கட்டி வலை மூலம் 15 கிலோ நிறையுடைய ஆமை பிடித்ததாகக் கூறி கடற்படையினர் இவரைக் கைதுசெய்துள்ளதாகவும் அவர் கூறினார். பிடிக்கப்பட்ட ஆமையுடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கூறினார்.

## கலாபூசன விருது இருவருக்கு

2012 ஆம் ஆண்டுக்கான கலாபூசன விருதினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நவாலி கிழக்கைச் சேர்ந்த இருவர் பெற்றுள்ளனர். இதில் கலை இலக்கியத்துறைக்கு கனகசபை நடேசனுக்கும், ஓவியத்துறையில் கந்தையா சரவணபவனும் பெற்றுள்ளனர். இவர்கள் நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (104)







பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்காக விளையாட்டு உபகரணங்களைத் தந்து எமக்கு ஊக்கமளித்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோருக்கு எமது கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவிப்பதோடு இவர்களது சேவை மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

வரணி நண்பர்கள் விளையாட்டுக் கழகம்

ஜே/341, இடைக்குறிச்சி மேற்கு, வரணி

(C/2281)


## தொழிற் பயிற்சி நிலையம் சிவபூமியில் ஆரம்பம்

கோண்டாவில் சிவபூமி பாடாசலை வளாகத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு மனிதநேய அமைப்பு இன்நிலையதிற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது.

கற்பூரம் தயாரிக்கும் இயந்திரம் உட்பட நவீன பயிற்சி சாதனங்களை சிவபூமி அறக்கட்டளை கொள்வனவு செய்துள்ளது. சிவபூமி அறக்கட்டளை நிதியத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இத்தொழில் பயிற்சி நிலையம் இம் மாத இறுதிப் பகுதியில் தொடங்கப்படவுள்ளது. இதற்கான காணி கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கருகில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (137)

## தாக்குதலில் பெண் காயம்

(வடமராட்சி)

வரணி வடக்கில் குடும்பப் பெண் மீது இனம் தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்று இரவு வீட்டு வாயிலில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அக் குடும்பப், பெண்ணை அழைத்து இத்தாக்குதலை நடாத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

பரமசிவம் இரத்தினேஸ்வரி (வயது-55) என்பவரே இத்தாக்குதலில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளார். (116)

## முதியவரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

துன்னாலை போதராயர் மடப் பகதியில் முதியவர் ஒருவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை கிட்டினன் (வயது-71) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள இவரது வீட்டிற்கு அருகில் தோட்டம் ஒன்று உள்ளது. இத்தோட்டத்திலுள்ள கிணற்றிலிருந்தே இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.(116)




41 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு வீரமுத்து கண்ணன் அவர்கள் இன்று தனது 41 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றார்.

இன்றுபோல் என்றும் சீரும் சிறப்புடன் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல மடத்துக்கரை முத்துமாரி அம்மன் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்று வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள் – மனைவி புஸ்பா, பிரான்சில் இருக்கும் மகன் செந்தூரன்

(C/2282)


## காவல் அரணை அகற்ற படைத்தரப்பு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காவலரணை அகற்றுவதற்கு படைதரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயம் பல்லின மக்கள் வருகை தந்து செல்லும் இடமாக அமைந்துள்ளது. இதற்குள் பாதுகாப்பு படைத் தரப்பினரால் காவலரண் அமைத்துள்ளமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

அது தொடர்பில் யாழ். பாதுகாப்பு படைகளின் தளபதியுடன் கலந்துரையாடப்பட்டதையடுத்து இரண்டு நாட்களுக்குள் நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள காவலரண் அகற்றப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதாக யாழ். மாநகர சபை முதல்வர் மேலும் தெரிவித்தார். (02,25)

# 200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு துணுக்காய் வலயத்தில் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆசிரியர்களுக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் துணுக்காய் பிரதேசத்தில் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

இதில் ஆரம்பக்கல்வியில் 2 ஆசிரியர்களும், இடைநிலைப் பாடங்களாகிய ஆங்கில பாடத்திற்கு 59 ஆசிரியர்களும், கணித விஞ்ஞான பாடங்களிற்கு 23 ஆசிரியர்களும் தேவைப்படுகிறது. இதேபோல் இருவருட ஒப்பந்த அடிப்படையில் தமது கடமையை நிறைவு செய்யும் 43 ஆசிரியர்களும் இவர்களை விட 2013ஆம் ஆண்டு இடமாற்றத்தால் 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் என 200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பாக வடமாகணக்கல்விப்பணிப்பாளர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண ஆளுநர் போன்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக விரைவாக தீர்க்கப்படும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (12)



குருநகரில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர், அண்ணா நினைவு சிலை யின் பாதுகாப்பு சுவர் மதுபோதையில் சில விசமிகளால் சேதமாக் கப்பட்டுள்ளதைக் காணலாம்.

(படம் : பா.பார்த்தீபன்)

## மண்டைதீவுக்கு கிராமிய மருந்தகம்

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை நிர்மாண நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை அமைந்திருந்த பகுதியில் இருந்த அழிவடைந்த திட்டத்தின் பகுதிகள் அங்கிருந்து அகற்றப்பட்டு அந்தப் பகுதி துப்புரவு செய்யப்பட்டு நிர்மாணப் பணிகளுக்கான உள்ளீடுகள் அந்தப் பகுக்கு நகர்த்தப்பட்டிருப்பதுடன் விரைவில் இந்த வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## வைத்திய அதிகாரி புதிதாக நியமனம்

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாகவும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் பணி புரிந்த அன்ரன் சுதாகரன் சுரனுதா இம் மாதம் முதலாம் திகதி முதல் சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

இங்கு முன்னர் பணியாற்றி சுகாதார வைத்திய அதிகாரி சிவபாதம் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனை அடுத்தே இவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். (104)

## குடாநாட்டுச் சந்தைகளில் தேங்காயின் விலை அதிகரிப்பு

(அரியாலை)

குடாநாட்டின் சகல சந்தைகளிலும் தேங்காய் விலை மிகவும் அதிகரித் திருப்பதாக பாவனையாளர் தெரிவித்துள்ளனர்.

வழமையாக தேங்காய் விலை பொதுவாக சரிவாக காணப்படும் சாவகச்சேரி கொடிகாமம் போன்ற தென்மராட்சிப் பகுதியில் கூட தேங்காய் ஒன்று ஐம்பது ரூபாய் வரை விற்பனையாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று யாழிலும், கல்வியங்காடு, திருநெல்வேலி, அரியாலை சந்தைகளிலும் கடை களிலும் தேங்காயின் விலை அதிகரித்துள்ளதாகவும், தைப்பொங்கலோடு இதன் விலை மேலும் அதிகரிக்கலாம் எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தீவுப் பகுதிகளிலும் தேங்காயின் விலை ஏறுமுகமாகவே இருக்கிறது. இந்தப்பகுதிகளிலும் தட்டுப்பாடு நிலவுவதால் முன்னர் போன்று யாழ்.சந்தைகளுக்கு தேங்காய்களின் வரத்தும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

## குடும்பங்களுக்கு உதவிகள்

(மல்லாவி)

பாண்டியன்குளம், துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 370 குடும்பங்களுக்கு உலருணவுகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் துணுக்காய் பிரதேசத்தில் 180 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கில் 190 குடும்பங்களுக்கும் உலருணவுகளை வழங்கியுள்ளதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ் உதவிகள் மாண்டியன்குளம், துணுக்காய் பிரதேச செயலரூடாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (140)

## விழிப்புணர்வுக் கூட்டம்

(பருத்தித்துறை)

முன்னெச்சரிக்கை கோபுரங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழிப்புணர்வுக்கூட்டம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் முன்னெசரிக்கை கோர்புரம் அண்மையில் பருத்தித்துறை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சுப்பர்மடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக முன்னெச்சரிக்கை தொடர்பான இயலுமையை மேம்படுத்துவதும் பதிலிறுத்தலும் செயற்படுத்தும் போது ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விரிவாகத் தெளிவுபடுத்தப் படவுள்ளதால் கடற்கரையோரமாக வசிக்கும் பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராமசேவையாளர் அறிவித்துள்ளார். (109)

## கிளிநொச்சி, பளையில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை கிளிநொச்சி நகரப் பிரதேசங்களில புதிதாக இரு எரிபொருள் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ் கண்டி வீதியில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணிக்கும் நிலையில் எரிபொருள் நிரப்புவதற்கு வசதி செய்யும் முகமாகவே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இவ்விரு இடங்களில் எரிபொருள் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கிளிநொச்சி நகரப் பிரதேசத்தில் கரடிப் போக்கு சந்திக்கும் முறிகண்டி பிரதேசத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் எரிபொருள் நிரப்ப வசதியின்றி நாளாந்தம் ஏராளம் வாகனங்கள் சிரமப்படும் நிலையை கிளிநொச்சி நகரப்பிரதேசத்தில் அமைக்கப் படும் நிலையம் தீர்த்து வைக்கவுள்ளது.

அதே போல கரடிப் போக்கிற்கும் கொடிகாமம் பிரதேசத்திற்கும் இடையில் எரிபொருள் நிலையம் இல்லாத குறையை பளைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் எரிபொருள் விற்பனை நிலையம் தீர்க்கவுள்ளது. (90)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. க.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் எதிர் வரும் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு காரைநகர் அபிவிருத்திச் சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மாந்தை கிழக்கில் சில கிராமங்களுக்கு மின்சார விநியோகம் இல்லை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை மின்சார விநியோகம் கிடைக்காத கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கு மின்சார விநியோகத்தை பெற்றுத்தருமாறு பலதரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டநிலையில் இவற்றில் சில கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை குறிப்பாக நட்டாங்குளம், பனங்காமம், சிறாட்டிக்குளம் போன்ற சில கிராமங்களுக்கே மின்விநியோகம் வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். மின்சார விநியோகத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களும் மின்சாரசபையிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் இக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இக்கிராம மக்களின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு இம்மக்களுக்கு மின்சார வசதியை பெற்றுக் கொடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)



குருநகர் நாட்டுக் கூத்து மன்றத்தின் ஒளிவிழா நிகழ்வில் விருந்தினர் அமர்ந்திருப்பதையும், சிறுவர் நடனநிகழ்வையும், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட கலாபூஷணம் கி.மக்ஸிமஸ் மற்றும் பார்வையாளர்களையும் காணலாம். (68)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இயல்பு உணர்ந்தோர் இனிய காண்பர்!

அபிவிருத்தியும் வேண்டாம்; அற்ப சலுகைகளும் வேண்டாம், சர்வதேசத்திடம் பேசி அரசியல் தீர்வைப் பெற்றுத் தருகிறோம் என்று யுத்தம் முடிவடைந்த பிறகு நடந்த மூன்று தேர்தல்களிலும் வாக்குறுதியளித்தார்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர். மூன்று வருடங்களுமாகி விட்டன. இவர்கள் சொன்னது ஒன்றும் நடக்கவில்லை. இப்போதும், "இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேசத்தின் அழுத்தம் அவசியம்" என்னும் நாலாம் வாய்பாட்டைச் சொல்லிவிட்டுத் தங்கள் அரசியல் கடமை முடிந்ததாக ஓய்வெடுக்கிறார்கள்.

இதுவரை உருவாக்கிய சர்வதேச அழுத்தங்களை வைத்துக்கொண்டு இவர்கள் சாதித்து முடித்ததென்ன? இனி என்ன அழுத்தத்தை இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? எப்போது எந்த மாதிரியான அழுத்தம் உருவாகி நமக்குத் தீர்வு வரப்போகிறது? என்ன மாதிரியான தீர்வு? என்று எதையுமே இவர்கள் சொல்லுவதில்லை. சர்வதேச அழுத்தம் என்பதை ஏறக்குறைய ஒரு மத நம்பிக்கையாகவே ஆக்கிவிட்டார்கள்.

கஷ்டங்களைச் சொல்லிப் புலம்புவோம்; அதற்கான தீர்வைக் கடவுள் தருவார் என்பது மாதிரியான மதப் பிரசாரகர்களாகவே மாறிவிட்டார்கள். சர்வதேசம் என்ன தரும்? எப்படித் தரும்? எப்போது தரும் என்று யாரும் கேள்வி கேட்க முடியாது. இறை நம்பிக்கையில் கேள்விகளுக்கு இடமேது? சர்வதேச பக்தியில் உருகிப் பஜனை பாடிக்கொண்டிருந்தால், தன்னை நம்பித் தொழுதுகொண்டிருப்பவர்களிடம் என்றாவது ஒருநாள் கடவுள் வராமலா போய்விடப் போகிறார்?

சரி, சர்வதேசம் அழுத்தி, அரசாங்கம் எந்தத் தீர்வைத் தந்தால் இவர்கள் எடுப்பார்கள்? யோசித்துப் பார்த்தால், அரசாங்கம் தரும் எந்தத் தீர்வையும் இவர்களால் எடுக்க முடியாது என்பதையே விளங்கிக்கொள்ள முடிகிறது. அப்படி ஏதாவது இவர்களுக்கு முடியுமாக இருந்தால்தான், தீர்வை வரைந்தெடுத்துக்கொண்டு போய் சர்வதேசத்தை வலியுறுத்தி இருப்பார்களே! இவர்கள் மக்களுக்கு ஊட்டிவைத்திருக்கும் மிகைகற்பனைகள் ஆவேசங்களின் விளைவாக, இவர்கள் எந்தவொரு தீர்வை எடுத்தாலும் துரோகிகளாகிவிடும் ஆபத்திலிருக்கிறார்கள். இவர்களே வீசிய பூமராங் அரசியலின் விளைவு!

வெறுப்பும் பழிவாங்கும் உணர்ச்சியும் வீரப்பிரதாபங்களும் மறையாமல் இணக்கமும், முன்னேறும் வாழ்வும் எப்படிச் சாத்தியமாகும்? இதோ, இவர்களுக்காகவே இந்தப் புறநானூற்றுப் பாடல்.

ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்ப்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்!
இன்னாது அம்ம இவ் உலகம்
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே.

புறநானூற்றில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'க்கு அடுத்ததற்கு அடுத்த பாட்டு (194) இது. பக்குடுகை நன்கணியார் பாடியது. தீதும் நன்றும் பிறர்தந்து வருவதில்லை. இன்பமாக வாழ்வை அமைத்துக்கொள்வதோ அல்லது துன்பத்தில் உழலுவதோ நம்மிடம்தான் இருக்கிறது. பிறரைச் சாட்டிப் புலம்பிக் கொண்டிருப்பதால் எதுவும் நடப்பதில்லை என்பது உணர்த்தப்பட்ட பிறகு இந்தப் பாடல் வருகிறது.

ஒரு வீட்டில் சாவீட்டுப் பறையும் கண்ணீரும், இன்னொரு வீட்டில் கல்யாண மேளமும் துணையோடு கூடிமகிழ்தலுமாக படைக்கப்பட்டிருக்கும் இவ்வுலக இயற்கையானது கொடியதே. ஆதலால், இவ்வுலகின் தன்மையறிந்தோர் கெடுதிகளை மறந்து நல்லது நினைப்பதிலும் நல்லது செய்வதிலுமே கவனம் செலுத்துவர் என்கிறார் புறநானூற்றுப் புலவர்.

- ஆசிரியர்

# நலன்புரி நிலையங்களின் திருத்தப்பணி கோரிக்கையினை அமைச்சரவை ஏற்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்டும் இடம்பெயர்ந்துமுள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களின் திருத்தப்பணிகளுக்கென நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதனை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தமது நிலை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரியப்படுத்தியதை அடுத்து இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்திய அமைச்சர், இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தினை தாக்கல் செய்தார். மேற்படி விடயத்தினை அங்கீகரித்த அமைச்சரவை நலன்புரி நிலையங்களின் திருத்தப்பணிகளுக்கான நிதியொதுக்கீட்டினை மேற்கொள்ள முடிவுசெய்துள்ளது.

# பலவீனமான எதிர்க்கட்சி இருந்தும் ஜனநாயகமாக நடக்கிறது அரசு

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

பலவீனமான எதிர்க்கட்சியொன்று இருந்தபோதிலும் அரசாங்கம் ஜனநாயகமாக நடந்துகொள்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனுக்காகவும் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் இருந்து நாம் பின்வாங்க மாட்டோம். அரசியலமைப்பிற்கமைய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். முன்மாதிரியாக நாம் செயற்படுவோம்.

தற்போது மிகவும் பலவீனமான எதிர்க்கட்சியொன்றே காணப்படுகின்றது. அரசாங்கம் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தக் கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பலவீனமான கட்சி தொகுதி அமைப்பாளர்கள் நீக்கப்பட உள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மகாவலி நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை ஜே.வி.பி., கூட்டமைப்பு எடுக்கின்றன

## — பிரதி சபாநாயகர்

(கொழும்பு)

ஜே.வி.பி.யும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சியும் கடந்த காலங்களைப் போன்றே தற்போது நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை எடுத்து வருவதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில தீர்மானங்கள் நாட்டை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளன.

பிரதம நீதியரசரினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு தொடர்பான விசாரணைகளில் ஆஜராகப் போவதில்லை என சபாநாயகர் ஏற்கனவே தீர்மானித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஜே.வி.பி.யும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் ஆஜராகத் திட்டமிட்டுள்ளன.

இந்த நடவடிக்கையானது சபாநாயகரின் உத்தரவினை மீறும் வகையில் அமைந்துள்ளது.

அரசியலமைப்புடன் தொடர்புடைய விடயங்களில் அரசியல் பேதம் பாராட்டுவது நியாயமானதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் நாட்டைப் பிளவடையச் செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது என சந்திம வீரக்கொடி குற்றம் சுமத்தியுள்ளார்.

# தாதியருக்கான கொடுப்பனவு ஜனவரியிலிருந்து அதிகரிப்பு

(கொழும்பு)

தமது மேலதிக வேலைக்கான கொடுப்பனவு, இடர் கொடுப்பனவு என்பவை இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க சேவை ஐக்கிய தாதியர் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.

நிதியமைச்சின் செயலாளர் உட்பட பல உயர் அதிகாரிகளுடனான சந்திப்பை அடுத்து இரு தரப்பினரும் இந்தக் கொடுப்பனவு அதிகரிப்புக்கு இணக்கம் தெரிவித்ததாக இந்த தாதியர் சங்கம் கூறியுள்ளது.

இதன் பிரகாரம் தரம் 2 பி தாதியரின் மேலதிக வேலைக் கொடுப்பனவு 65 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகவும் தரம் 2 ஏ தாதியரின் கொடுப்பனவு 75 ரூபாவிலிருந்து 125 ரூபாவாகவும் தரம் 1 தாதியரின் கொடுப்பனவு 80 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இடர் கொடுப்பனவு 200 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது எமக்கு கிடைத்த பெரிய வெற்றியாகும். இதனால் 11,000 தாதியர் நன்மையடைவர் என சங்கத்தின் அனைத்துலக சங்கச் செயலாளர் அசோக அபேநாயக்க கூறினார். ஆயினும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

# துப்பாக்கிகளுடன் விவசாயிகள் கைது

(கொழும்பு)

பொத்துவில் றொட்டை வயல் பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கட்டுத் துப்பாக்கிகள் ஐந்துடன் வேளாண்மைக் காவலுக்கு நின்ற விவசாயிகள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்தகுமார தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து றொட்டை வயல் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வேளாண்மைக்கு காவலுக்காக அமைக்கப்பட்ட வாடிகளை அதிரடிப்படையினர் சோதனையிட்டனர்.

வாடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கிகள் ஐந்து இதன்போது கண்டுபிடிக்கப்பட்டன.

# புதிய வாகனப் பதிவில் கடந்த ஆண்டு பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 2012ஆம் ஆண்டு புதிய வாகனப் பதிவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் சுமார் 4 இலட்சம் புதிய வாகனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதுவொரு பாரிய வீழ்ச்சி என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. 2011 ஆம் ஆண்டில் ஐந்து இலட்சத்து 33 ஆயிரம் புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த வருடம் புதிய முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பதிவில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாக மோட்டார் வாகனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

**திருமாவளவன்**

# மரம்

என் ஊர் நடு நின்றது அந்தப் பெருமரம். ஊருக்கு ஊர் தேசத்துக்கு தேசம் ஒரு அடையாளம் உண்டு. தொரன்றோ என்றால் சீ.என். கோபுரம். பாரீஸ் என்றால் ஈபிள் கோபுரம். கொழும்பு என்றால் கோட்டைப் புகையிரத நிலையம். யாழ்ப்பாணம் என்றால் பனைமரம். இந்த வகையில் என் ஊர் என்றதும் நினைவுக்கு வருவது இந்தப் பெருவிருட்சந்தான்.

ஐந்தாறுபேர் சேர்ந்து கட்டிப்பிடித்தாலும் கைகொள்ளாதது. அதனுடன் சூழ மேலும் சில மரங்கள். ஒரு கூட்டுக்குடும்பம் போலத் தோன்றும். இந்த மூல மரத்தில் மட்டும் ஆல் புளி வேம்பு மற்றும் காத் தோட்டி என வேறும் சில மரங்கள். மரத்தின் பெரும் பொந்துகளில் பறவைகள் கொணர்ந்திட்ட எச்சம் முளைவிட்டு வேர்விட்டு இப்போ துணை விருட்சங்களாகி விட்டன. அதிலும் குறிப்பாக ஆல் விழுதிறங்கி நிலத்தில் வேர் கொண்டு விட்டது. பலஇனக்கிளை கொண்ட ஒரு ஒட்டு மாங்கன்று போல இந்த மரமே பல்வேறு இனமரங்களைக் கொண்ட தனிக் காடு.

இரவில் பார்த்தால் ஊரின் நடுவே மலைக்குன்றென இம்மரக்கூட்டம் காட்சி தரும். பகலில் யானைக்கிளை நடுவே ஒரு பெரு யானை தலைமைகொள்வது போலத் தோன்றும். அதன் காலடியோரம் சிறு குளம். குளத்தில் இவை வேர்களால் நீர் அருந்துகின்றனவா அல்லது கிளைகளால் அருந்துகின்றனவா என்ற ஐயம் எழும். அந்த அளவுக்கு இரண்டும் அன்னியோன்னியமானவை. இரண்டுக்குமிடையே பெருத்த உறவுண்டு. குளம் நிரவியிருக்கின்ற காலத்தில் மருதன் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. புதுத்தளிர் எறிந்து சிரிப்பதும் பூக்களை உதிர்த்து மகிழ்வதுமாக இருக்கும். கோடைவர குளத்தின் சோகம் மருதனுக்கும் தொற்றிவிடும். ஆடித்தூக்கம்போல் எந்த அசைவும் இருக்காது. மயில் இறகு கொட்டுவது போல பழுத்த இலைகள் மெல்ல கீழ் இறங்கும்.

யாரோ ஒரு ஞனக்கிறுக்கன் கிழக்குப்புறமாய் நிலத்தோடிருந்த குமிழ் போன்ற பகுதியை தெரிவுசெய்து பிள்ளையாரின் முடியெனச் சொல்லி பூ வைக்கத் தொடங்கிவிட்டான். பின் அதற்கு மேல் ஒரு காவோலையை நிழலாய் வைத்தான். தொடர்ந்து வளர்ந்து ஒரு கிடுகுக் குடிசையானது. பின் மடாலயம். பிறகு சிறு கோவில். ஊர் கலைந்தோடிய காலத்தில் ஓரளவு பெரிய கோவிலாகி விட்டது.

> **இருபது கரங்களையும் தோளோடு வெட்டி வீழ்த்திவிட்ட பின்பும் எழுந்து நிற்கும் ராவணனின் தோற்றம் என் கண் முன் தெரிந்தது. மரம் உயிர் மூச்சைப் பிடித்த படி நடுங்கும் குரலில் முனகிக் கொண்டிருந்தது. மரம் வெட்டுவதாக இருந்தால் என்ன, போர் செய்வதாக இருந்தால் என்ன, ஆயுதங்கள் கைக்கு வரும்வரை தான் மனிதன் மனிதனாக இருக்கிறான். அவை இயங்கத் தொடங்கிய பின், அவையே அவனை இயக்கத் தொடங்கி விடுகிறது.**

பிறகென்ன கொண்டாட்டத்திற்கு சொல்லவா வேண்டும். பாலும் இளநீரும் பருகி வளர்ந்தது மரம். நான் நாஸ்திகன் கிடையாது. அதற்காக முழுமையான ஆஸ்திகனும் அல்ல. என்னிடம் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விகளுக்குப் பதில் இல்லை. அந்த ஆராய்ச்சிக்குள் போவதும் இல்லை. இருந்தும் எனக்கும் இந்த மரம் கடவுள் போல. உன் மிகச்சிறந்த நண்பன் யாரெனக் கேட்டால் மருதன் என்று இந்த மரத்தின் பெயரைத் தயக்கமின்றிச் சொல்வேன். எனக்கு மிக நல்ல ஆசான். உரிமையுள்ள உறவினன். ஏதாவது மனசுக்கு துன்பம் வரும் வேளையில் முதல் நினைவுக்கு வருவது இந்த மருதன் தான். இப்போதும் கூட ஊருக்குப் போக அனுமதி கிடைத்தால் நான் பார்க்கப் பேச மனம் அவாவுகிற இடம் இந்த மரத்தடிதான்.

மரத்துக்கு ஞானமுண்டா? மனித மொழி தெரியுமா? மனிதனுக்கு பகுத்தறிவுண்டல்லவா? இப்படி முட்டாள்த்தனமாய் மரத்தைப் போற்றலாமா? என யாருக்காவது ஐயுறவெழக்கூடும். புத்தன் எங்கே ஞானத்தைப் பெற்றான். வெள்ளரசின் கீழ் இருந்தல்லவா! மணிவாசகனுக்கு குருந்தை மரமல்லவா அதை அருளியது. மரத்துக்கு மொழி தெரியாமலா ஊரவர் எல்லோரும் மரத்துக்குத் தன் துயரங்களைச் சொல்கிறார்கள். மரத்தை சுற்றிச்சுற்றி மனதால் வேண்டுபவர்களை பார்த்திருக்கிறேன். மரத்தோடு வாய்விட்டு பேசுபவர்களை பார்த்திருக்கிறேன். மரத்துக்குத் தம் துயரங்களைச் சொல்லி கண்ணீர்விட்டு அழுபவர்களையும் பார்த்திருக்கிறேன்.

இந்த மரத்திடம் ஆயிரமாயிரம் கதைகள் உண்டு. தன் ஊரில் குடியேறிய முதல் குடியை இந்த மரம் அறியும். அவர்களின் வாழ்வறியும். ஒவ்வொருவரின் கதையும் அதற்குத் தெரியும். தனக்கு பாலூற்றியவர்களை அறியும். அடுத்தவர்க்குப் பழி செய்தவர்களை அறியும். பழி செய்த பாவம் கழிய பாலூற்றியவர்களையும் அறியும். யார் யாரை மிதித்து மேலே எழுந்தார்கள் என்பதை அறியும். யார் கள்ள உறுதி எழுதி காணி பிடித்தார்கள், யார் எல்லைதாண்டி வேலியடைத்தார்கள், யார் பொய்ச் சத்தியம் செய்தார்கள், யார் மொட்டைக் கடிதம் எழுதி அடுத்தவர் குடும்பத்தை கெடுக்க நினைத்தார்கள், யார் யாருக்கு செய்வினை வைத்தார்கள், யார் யாருக்குப் பிறந்தார்கள், யார் அருகில் நின்ற துணைமரங்களுக்கு உமி கொட்டி தீயிட்டார்கள் என்ற விபரம் எல்லாம் அதற்குத்தான் வெளிச்சம்.



சின்னப்பொடியனாய் திரிகையில் தென்னங் கோம்பைப் பாதியில் சுள்ளிகளை நிறைத்து தீமூட்டி குளத்தில் புகைக்கப்பல் மிதக்கவிடுவோம். தை பிறந்தால் மழைமுடிந்து சூரியன் மின்னத் தொடங்கும். குளம் நிரவியிருக்கும். அதிகமும் மதிய நேரங்களில் மரத்தடி சனசஞ்சாரமற்று அமைதியாய் இருக்கும். திருவிழாவுக்கு கட்டிய வாழைக் குற்றிகளை இணைத்து படகோட்டுவோம். படகு கவுண்டு நீரில்வீழ்ந்து நனைந்த கழிசானை பிழிந்து காயவைத்துவிட்டு அம்மணமாய் அலரிச் செடியின் பின்னால் மறைந்திருப்போம். எப்படித்தான் காயவைத்து போட்டுக் கொண்டு போனாலும் அம்மாவுக்கு எப்படியோ மணத்துவிடும். பிறகென்ன சொல்லவா வேண்டும். பூவரசந்தடிப் பூசைதான். மறுநாள் மீளப்போனால் எப்படி நல்ல அடி கிடைத்ததா என்பது போல மெல்லிய வாடைக்காற்றில் அசைந்து துளிர் இதழ்களால் நக்கல் சிரிப்புதிர்க்கும்

நினைவுகள் எவ்வளவு அற்புதமானவை. அப்படி ஒன்றில்லை என்றால் இவற்றினூடு நான் இன்று வாழமுடியுமா? நினைவுகள் அல்லவா என் வாழ்வை அர்த்தப்படுத்துகின்றன. ஒரு நடுப்பகலில் இந்தமருதின் நீழலிற்தான் எனது இணை தன் காதலை எனக்கு குறிப்புணர்த்தினாள். இவ்வளவு நாட்களும் இது தெரியாது அசடனாயிருந்துவிட்டேனே என அசடுவழிய நிமிர்ந்து பார்த்தேன். உச்சியிலே இருந்து ஏதோ ஒரு பெயர் தெரியாப் பறவை தன் இணையோடு. ஊடலில் இருந்தது.

போர் தொடங்கிய பிற்பாடு என் பெரும்பொழுது மருதனுடனே கழிந்தது. யாராவது ஒருவர் என்னைத் தேடிவந்து ஊரில் என் வீட்டை அடையாளம் கேட்டால் அடையாளம் சொல்லியபின் அவன் அனேகம் மருதின் கீழ் நிற்பான். அங்கே போனால் காணலாம் என்று கூடவே விபரம் சொல்வார்கள்.

1990 ஜூலை 10ஆம் திகதி.

மதியம் கழிந்து மாலைதொடங்குகிறது. என்.கே.பத்மநாதனின் நாதஸ்வர இசை பெரு மழையெனச் சொரிகிறது. மருதின் நீழலில் ஊர் கூடி நிறைந்திருந்தது. எல்லோர் மனதிலும் ஒருவித ஊமை அழுக்கம். சிறுமகிழ்வும் அழிந்து இருள் படரத் தொடங்கிவிட்டது ஒருவித பதட்டம். பதகளிப்பு. இந்திய இராணுவம் சென்றதும் அமைதியாயிருந்த சிலகாலமும் முடிவடையப்போவதாக குசுகுசுக்கிறார்கள்.

திடீரென மேற்கிலிருந்து எழுகிறது இரண்டு துவக்குகளின் தொடர் வேட்டோலி. ஒருநிமிட அமைதி. மீண்டும் தொடர்கிறது சரவெடிகள். கிழக்கே பலாலியிலிருந்து எழுந்து விட்டது ஹெலி. பிறகு கச்சேரிக்கு சொல்லவா வேண்டும். ஹெலி சுற்றிச்சுற்றி அடிக்கிறது. பத்மநாதன் நாதஸ்வரத்தை உளையுள் சுற்றிக் கட்டியபடி பாதுகாப்பான இடம்தேடி ஓடுகிறார். பெரு மழை ஓய பாய்கிறது ஊர் பெருவெள்ளமாக. இரண்டு நாட்களில் ஊர் வடிந்து ஒருசொட்டுமில்லாமல் தீர்ந்து விட்டிருந்தது.

நான் வீட்டுக்கும் மருதுக்குமிடையே பலமுறை நடந்துவிட்டேன். இரவு மருதின்கீழ் தங்கினேன். ஒரு மரண வீட்டில் இராப்பிணம்காப்பது போல இரவு முழுவதும் விழித்திருந்தேன். என்னோடு தங்கிய கண்ணப்பன் இனி இருப் பதில் பலனில்லை, கரலையில் புறப்படுவோம் என்றான். மூன்றாம் நாட் புறப்படு முன் மரத்தை நிர்ந்து பார்த்தேன். அசைவற்று கிடந்தது. வீட்டிலிருந்து ஒரு பொருள்கூட எடுக்கவில்லை. நடந்தேன். நெடுந்தூரம். உலகின் எல்லை வரை.

இப்போ இருபது வருடங்களுக்கு மேலாயிற்று.

(17ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் கணக்கு தப்பு



(கொழும்பு) நான்காவது கட்ட ஈழப் போர் மூண்டால் இலங்கை இராணுவம் தலைமைத்துவக் குறைபாடுகளால் தோல்வியைத் தழுவ நேரிடும் என்ற அமெரிக்காவின் கணிப்பு தப்பாகிப் போனதாக, கொழும்பு இராணுவ ஆய்வாளர் சாமிந்ர பெர்னான்டோ குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் அவர் எழுதியுள்ள பத்தியில் இதுதொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றியை, ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரதமராக இருந்தபோது, அரசபடைகளின் நிலை தொடர்பாக அமெரிக்கா மேற்கொண்ட ஆய்வுக்கு முரணாகவே பார்க்க வேண்டும்.

2002 ஜுலையில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஸ்ஸை சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நோர்வேயின் ஏற்பாட்டில், போர்நிறுத்த உடன்பாடு கையெழுத்திடப்பட்ட சில மாதங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒரு கனதியான அறிக்கையை வெளியிட முன்னர், அமெரிக்க நிபுணர்கள், இலங்கை இராணுவத்தின் போர் நடவடிக்கைகள், கொள்கைகள், கொள்வனவுகள், பயிற்சி, இராணுவ நிபுணத்துவக் கல்வி போன்றன குறித்து விரிவாக ஆய்வு நடத்தினர்.

அப்போதைய அரசாங்கம் அதுபற்றி விவாதிக்க விரும்பவில்லை.

இந்த அறிக்கையில், விடுதலைப் புலிகளை விட ஆட்பலத்திலும், ஆயுதபலத்திலும் இலங்கை இராணுவம் மேம்பாடான நிலையில் இருந்தாலும், போர் நடவடிக்கைகள் பற்றிய கோட்பாடுகளை இலங்கை இராணுவத் தலைமைகள் சரியான முறையில் பயன்படுத்தத் தவறியதால், விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை என்று கூறப்பட்டிருந்தது.

தலைமைத்துவக் குறைபாடுகள் காரணமாக, நான்காவது கட்ட ஈழப்போரில் இலங்கை அரசாங்கம் வடமாகாணத்தில் தோற்கடிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும், கிழக்கு மாகாணத்தில் தோற்கடிக்கப்படுவதற்கு சாத்தியம் உள்ளதாகவும் அமெரிக்கா எச்சரித்திருந்தது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பாரத லக்ஸ்மன் கொலை ; தொடர்புடைய ஐவருக்கு பிணை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மொத்தமாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐந்து பேருக்கு தலா 250,000 ரூபா ரொக்கம், 200,000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

ஏனைய சந்தேக நபர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பதில் நீதவான் கனிஷ்க விஜேவர்தன உத்தரவிட்டுள்ளார்.

# பாக்கியசோதி சரவணமுத்து மீதான கொலை மிரட்டல் மேற்குலகின் சதி

## ஜனாதிபதி கூறியதாக விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் டாக்டர் பாக்கிய சோதி சரவணமுத்துவிற்கு விடுகக்கப்பட்ட கொலை மிரட்டலானது மேற்குலக நாடுகளின் சதித் திட்டம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஊடகங்களுக்கு தெரிவித்திருந்ததான விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் தெரிவிககப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைத் திட்டம் தொடர்பில் பாக்கிய சோதி சரவணமுத்து வெளியிட்ட கருத்துக்களைத் தொடர்ந்து அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது.

கடிதம் ஒன்றின் மூலம் அவருக்கு இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஜீ.எஸ்.பி சலுகைத் திட்டத்தை இரத்துச் செய்யும் முனைப்புக்களில் அவர் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த நடவடிக்கையைத் தொடர்ந்தால் கொலை செய்யப் போவதாகவும் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொலை மிரட்டல் கடிதத்தை டாக்டர் பாக்கிய சோதி சரவணமுத்து, இராஜதந்திரிகளுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை மிரட்டல் மெய்யானதா என்பதனை விசாரணை செய்யுமாறு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் கோரியிருந்தார்.

நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் சில மேற்குலக நாடுகள் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசீயா புட்டீனாஸ் இந்தத் தகவல்களை அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளும் அதன் உள்நாட்டு ஆதரவாளர்களும் இணைந்து நாட்டுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டி வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

# விபரங்கள் ஒப்படைக்காத கட்சிகளின் பதிவுக் காலத்தை நீடிப்பதில்லை

(கொழும்பு)

ஆண்டறிக்கை மற்றும் சொத்து விபரங்களை ஒப்படைக்காத கட்சிகள் குறித்து நாளை தீர்மானிக்கப்பட உள்ளது.

கட்சியின் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கும் இடையில் நாளை மறுதினம் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அனைதது அரசியல் கட்சிகளையும் இந்த பேச்சுவார்த்தையில் இணைந்து கொள்ளுமாறு



தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் பதிவுக் காலத்தை நீடிப்பதில்லை என தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஐ.நாவிற்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விசாரணைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த கருத்துக்களுக்கு உத்தியோகபூர்வமாக பதிலளிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. நீதிமன்றம், நீதவான்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி கெப்ரியேல் நோவில் கருத்து வெளியிட்டிருந்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மான நடவடிக்கைகளை மீளாய்வு செய்யுமாறு கோரியிருந்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய பூரண விபரங்களை அறிந்துகொள்ளாமல் ஐக்கிய நாடுகள் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளதாகவும், இது தொடர்பில் பூரண விளக்கம் அளிக்கப்படும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# குற்றவியல் பிரேரணையின் தீர்ப்பில் மாற்றம் ஏற்படப் போவதில்லை



(கொழும்பு)

குற்றவியல் பிரேரணை குறித்த தீர்ப்பில் மாற்றம் ஏற்படப் போவதில்லை என இலங்கையின் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் 1, 4 மற்றும் 5 ஆகிய குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளன.

எனவே யார் விசாரணை நடத்தினாலும் தீர்ப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படப் போவதில்லை.

நாட்டின் அரசியல் அமைப்பிற்கு அமைவாகவே இந்த குற்றவியல் பிரேரணை முன்வைககப்பட்டது.

எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் இது குறித்த விவாதம் நடத்தப்பட உள்ளது.

விவாதத்தின் பின்னர் எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# பொருளாதார வளர்ச்சி கடந்த வருடம் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் 6.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

முன்னதாக, 2012 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 8 வீதமாக இருக்கும் என்று திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த வளர்ச்சி எட்ட முடியாது என பொருளாதார நிபுணர்களும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் கூறியபோது, அதனை மத்திய வங்கி நிராகரித்து வந்தது.

இந்தநிலையில், பல்வேறு காரணங்களினால் கடந்த ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட 8 வீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியவில்லை என்றும், 6.5 வீத பொருளாதார வளர்ச்சியே எதிர்பார்ககப்படுவதாகவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

# பல்கலையில் இராணுவ தலையீடு கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விவகாரங்களில் அரசாங்கம் இராணுவத்தை தலையிடச் செய்வதாகக் கூறி அதனைக் கண்டித்து நேற்றுமுன தினம் தலைநகர் கொழும்பில் போராட்டம் ஒன்று நடத்தப்படடது.

இலங்கை தேசிய மாணவர் அமைப்பைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.

அதன்போது தமது போராட்டம் குறித்து மாணவர்களால் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

தமது போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த தேசிய மாணவர் சங்கத்தின் செயலாளரான அசங்க புலேகொட யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்களை அடுத்து பல்கலைக் கழகங்களை இராணுவ மயப்படுத்த அரசாங்கம் முயல்வதாகக் குற்றஞ்சாட்டினார். இதனால் பல்கலைக்கழக மட்டத்தில் இருக்கும் ஜனநாயக நிலைமைகள் பாதிக்கப்படும் என்றும், அதனை மக்களுக்கு தெளிவுபடுத்தவே தாம் போராட்டம் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரச ஊழியர்களின் உயிர்நாடி மக்களுக்கு சேவையாற்றுவதாகும்

## - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்



(கிளிநொச்சி)

கிறிஸ்தவர்களுக்கு உயிர்நாடி பைபிள் போல அரச ஊழியர்களுக்கு உயிர்நாடி சிறந்த முறையில் மக்களுக்கு சேவையாற்றுவதாகும். அந்த வகையில் பிறந்துள்ள இந்த வருடத்தில் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதிய ஆண்டில் அரச சேவையாளர்கள் தேசியக் கொடியேற்றி கடமைகளை நிறைவேற்றும் வகையில் சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புதிய ஆண்டினை வரவேற்று அலுவலர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கடந்த வருடத்தில் அனைத்து அலுவலர்களும் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றியமையை நான் நன்றியுடன் பாராட்டி நிற்கின்றேன்.

மேலும் எமது மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்ற பல்வேறு செயற்றிட்டங்களும் நிறைவடைகின்ற நிலை காணப்படுவதால் அத்திட்டங்களில் பணியாற்றியவர்கள் தொழில் வாய்ப்பினை இழக்கின்ற அபாயம் உருவாகியுள்ளது.

இவ் அபாயத்திலிருந்து அவர்களை மீட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேலோங்க வைப்பதற்கு ஏற்ற வகையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். (142)

# விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டமும், கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டமும் கௌரவிப்பு விழாவும் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சங்கத் தலைவர் கே.ஸ்ரீபாலசுந்தரம் தலைமை தாங்கினர். பொது முகாமையாளர் ரீ.ரவிமயூரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ்.மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் பற்றிக்றஞ்சன் யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், உலக உணவு விவசாய நிறுவனத்திட்ட இணைப்பாளர் கலாநிதி கே.ஞானச்சந்திரன், யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.மோகனேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பொது முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்ற ரி.சிவலோகநாதன், பண்ணை முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்ற எஸ்.வல்லிபுரம் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. (01)

# தங்க நகை திருடியவருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை

(பருத்தித்துறை)

கரவெட்டிப்பகுதியில் தங்க நகைகளைத் திருடிய திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கரவெட்டி கொடிகாமம் வீதியில் உள்ள வீடொன்றை பட்டப்பகல் நேரம் உடைத்து 4 இலட்சத்து 30 ஆயிரத்து 980 ரூபா பெறுதியான தங்க நகைகளைத் திருடியதாக திருகோணமலை வாசி ஒருவர் மீது நெல்லியடிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திருடப்பட்ட நகைகளில் ஒரு பகுதியான 91 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் விற்கப்பட்ட நிலையில் திருகோணமலையில் உள்ள நகைக்கடை ஒன்றிலிருந்து மீட்கப்பட்டதாக நெல்லியடிப்பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து வீடு உடைத்தமை, நகைகளைத் திருடியமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா மூன்று மாத சிறைத் தண்டனை வீதம் ஆறுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (109)

# பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் திருவாசக விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு,

கீழ்பிரிவு

க.கேணகா (அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), யோ.டிவின்சியா (பரு.சித்தி விநாயகர் வித்தியாலயம்), ச.அபிராமி (வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி)

மத்திய பிரிவு

தி.சுபாஸ் (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), இ.ரஸ்மினி (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்).

மேற்பிரிவு

ப.கௌரீசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ர.ஸகிஷ்னா (வேம்படி மகளிர் கல்லூரி), க.காயத்திரி (விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி), சி.சங்கவி (வடமராட்சி இந்து பெண்கள் பாடசாலை).

ஆறுதல்பரிசு பெறுவோர

க.அபிஷா, (ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்), சு.சுதர்ஸன் (ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்), இ.பபிஷா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்).

செ.கம்சலா (வட இந்து பெண்கள் பாடசாலை பருத்தித்துறை), ச.வைஷ்ணவி (வட இந்து பெண்கள் பாடசாலை பருத்தித்துறை), நா.சயந்தினி (வட இந்து பெண்கள் பாடசாலை பருத்தித்துறை)

பா.பிரியா (பரு.சித்தி விநாயகர் வித்தியாலயம்) (01)



அரியாலை தென்கிழக்கு மணியம் தோட்டம் கிராமத்தில் 30 வருடங்களின் பின்பு மணியம்தோட்டம் சனசமூகநிலையத்துக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல்நாட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சிதலைவரும், ஈ.பி.டி.பியின் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் இரவீந்திரதாசன் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

# சர்ப்ப வாகன வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சீரடி சாயி மந்திரில் உற்சவ மூர்த்தியின் மகா கும்பாபிஷேக தின விழாவும், சர்ப்ப வாகன வெள்ளோட்ட விழாவும் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் சீரடி சாயி சற்சரித பாராயண நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

**(04.01.2013 - வெள்ளிக்கிழமை)**

நந்தன வருஷம் மார்கழி மாதம் 20 ஆம் திகதி.
நட்சத்திரம் உத்தரம் முற்பகல் 11.14 வரை. திதி ஸ்ப்தமி
மாலை 6.32 வரை. இராகுகாலம் 11.01 - 12.31 வரை.
சுபநேரம் 6.31 - 08.01 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்**

பேச்சில் மங்கலத்தன்மை. நல்லோரின் நட்பு. தொழில், தேவையான மாற்றம். பணவரவும், நன்மையும். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தி.

**ரிஷபம்**

முடியாமலிருந்த ஒன்றை, மாற்று உபாயத்தினால் முடிப்பீர்கள். போட்டியில் வெற்றியும் சாதனையும். தொழில், பாராட்டு பெறும். பணவரவு

**மிதுனம்**

சமூகத்தில் நன்மதிப்பு. வெகுநாளைய லட்சியம் நிறைவேறும். தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. நண்பருடன் விருந்து உபசரிப்பு.

**கடகம்**

மோதல் போக்குடன் செயல்பட்டவர்களும் அன்பு பாராட்டுவர். புதிய உத்வேகம். தொழில், செழிப்பு. சமூகத்தில் கௌரவம். உபரி வருமானம்.

**சிம்மம்**

கடந்த கால சிரமம் நினைப்பீர்கள். முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வளர்ச்சிக்கு கூடுதல் பணி. வரவை விட செலவு கூடும்.

**கன்னி**

உங்கள் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். சினம். பயனறிந்து பேசினால் நன்மை. தொழில், நிலுவைப் பணி நிறைவேறும். சீரான பணவரவு.

**துலாம்**

பேச்சில் வசீகரம். புதியவர் நட்பும் அன்பும். தொழில் அனுகூலம். உபரி வருமானம். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். மருத்துவச் செலவு.

**விருச்சிகம்**

உங்கள் நலனுக்கு எதிரானவரிடம் பெருந்தன்மையுடன் விலகுவீர்கள். தொழில், வளர்ச்சி. ஊழியர்களுக்கு சலுகைகள். வரவை விட செலவு.

**தனுசு**

பிறர் புகழ விரும்புவீர்கள். சுறுசுறுப்பு இருக்கும். நல்லது செய்யும் நாட்டம். தொழில், குளறுபடி வந்து சரியாகும். கடன் பெறுவீர்கள்.

**மகரம்**

அலைச்சல் இருக்கும். குறுக்கிடும் சிரமங்களை தாண்டலாம். தைரியம் அவசியம். அதிக உழைப்பு. தொழில் புதிய பரிமாணம்.

**கும்பம்**

ஆக்கபூர்வ திட்டம் உருவாகும். இல்லறத்துணையின் ஆலோசனை உதவும். தொழிலில் மாற்றம். எதிர்பார்த்த பணவரவு. போக்குவரத்தில் கவனம்.

**மீனம்**

சிரமமான சூழ்நிலை மாறிவிடும். எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம். தொழில், சிறக்கும். ஆதாய பணவரவு. உறவினர்களின் வருகை.



இறுதி டெஸ்ட் போட்டியில் களமிறங்கும் மைக்கல் ஹசி, ஆடுகளத்திற்கு விரைந்து செல்வதைக் காணலாம்.

# இலங்கை முதல் இனிங்ஸ் 294

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 294 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்துள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை, நாளைக் கடத்தும் வகையில் தடுத்தாடும் வகையிலேயே ஆடிவந்தது. முதல் விக்கெட்டை 23 ஓட்டங்களுக்குப் பறிகொடுத்த இலங்கை அணிக்கு, தொடர்ந்து வந்த மஹேல, டில்சானுடன் இணைந்த சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார். இதில் டில்சான் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். மூன்றாவது விக்கெட்டுக்ககாக இணைந்த திரிமன்ன, மஹேல ஜெயவர்த்தன இணை மிக மெதுவாக ஆடி, ஆமை வேகத்தில் ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்நிலையில் இந்த ஜோடி 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு புறம் திரிமன்ன சிறப்பாக ஆடி வந்த நிலையில், மறுபுறத்தில் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டு வந்தது. இறுதியில் இலங்கை அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திரிமன்ன 115 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்று, ஒன்பது ஓட்டங்களால் தனது கன்னிச் சத வாய்ப்பைத் தவறவிட்டார். மற்றும் மஹேல ஜெயவர்த்தன 110 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 72 ஓட்டங்களையும், டில்சான் 34, சண்டிமல் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போர்ட் நான்கு, ஸ்ராக் மூன்று, பீற்றர் சிடில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு நாள், ருவென்ரி–20 இலங்கை அணி அறிவிப்பு

Sri Lanka Cricket

(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளுக்கான இலங்கைக் குழாம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்த்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாமில், டெஸ்ட் குழாமில் இடம்பெற்றிருக்காத உபுல் தரங்க, திஸர பெரேரா, லசித் மலிங்க, அகில தனஞ்சய, அஜந்த மெண்டிஸ், ஜீவன் மெண்டிஸ், குஷால் ஜனித் பெரேரா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். இதில் குஷால் ஜனித் பெரேரா இலங்கை அணிக்கு அழைக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாம்:

மஹேல ஜெயவர்த்தன, அன்ஜலோ மத்தியூஸ், திலகரட்ண டில்சான், உபுல் தரங்க, லஹிரு திரிமன்ன, டினேஸ் சந்திமால், லசித் மலிங்க, நுவான் குலசேகர, திஸர பெரேரா, அகில தனஞ்சய, அஜந்த மெண்டிஸ், ஜீவன் மெண்டிஸ், சுரங்க லக்மால், ரங்கன ஹேரத், குஷால் ஜனித் பெரேரா, ஷமிண்ட எரங்க.

# தென்னாபிரிக்கா முழு ஆதிக்கம்



(கேப்டவுன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முழு ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் கேப்டவுனில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி, தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் வில்லியம்ஸன் 13 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் வெளியேறினர். இதேவேளை, டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் நியூசிலாந்து அணியின் 3ஆவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இது அமைந்தது. இதற்கு முன்பு 1955ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 26 ஓட்டங்களும், 1946ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 42 ஓட்டங்களும் எடுத்ததே நியூசிலாந்து அணியின் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்து வந்தது.

பந்துவீச்சில் பிலாந்தர் 6 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மோர்க்கல் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஸ்டெய்ன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதேவேளை, தனது 61ஆவது டெஸ்டில் பங்கேற்றுள்ள ஸ்டெயின் 2 விக்கெட் கைப்பற்றியதன் மூலம் அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 301 ஆக உயர்ந்தது. இதன் மூலம் பொலாக் (421 விக்கெட்), நிட்னி (390 விக்கெட்), அலன் டொனால்ட் (330 விக்கெட்) ஆகியோருக்கு பின்னர் 300 விக்கெட் மைல்கல்லை கடந்த 4ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற சிறப்பை ஸ்டெயின் பெற்றார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி முதல்நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

# இளம் வீரர்களின் செயற்பாட்டால் மகிழ்ச்சி

(புதுடில்லி)

நான் வெளியேறிவிட்ட போதிலும் இந்திய ஒரு நாள் அணி வலுவான அணியாகவே உள்ளது. இளம் வீரர்கள் சிறப்பான செயற்படுவதில் மகிழ்ச்சி என இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுகல்கர் தெரிவித்தார். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், முதல் முறையாக பத்திரிகையாளர்களை சந்தித்தார். இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் அணியில் இல்லாவிட்டாலும் என் இதயம் இந்திய அணி வீரர்களுடன் தான் இருக்கிறது. இந்த நேரத்தில் எமது ஆதரவு மற்றும் வாழ்த்துக்கள் அணிக்குத் தேவைப்படுகிறது. இதனால் அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். வெற்றி-தோல்வி என்பது எந்தவொரு அணிக்கும் வருவது வழமை. சென்னையில் இந்திய அணி அடைந்த தோல்விக்கு ஒன்றும் செய்ய முடியாது. பாகிஸ்தான் அணி முதலில் ஆடியிருந்தால் இதே நிலைதான் வந்திருக்கும். அதைப் பற்றி அதிகம் கதைக்க நான் விரும்பவில்லை.

கடந்த 23 ஆண்டுகளாக ஒருநாள் போட்டிக்கான அணியில் பங்குபெற்றிருக்கிறேன். அது மறக்க முடியாத பயணம். நான் உயர்ந்தபோதும், தாழ்ந்தபோதும் எனக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். 2013ஆம் ஆண்டு தொடங்கியிருக்கும் இவ்வேளையில், அனைவரும் மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.

கடந்த 23 ஆண்டுகளில், அதிகமான போட்டிகளில் பங்கேற்றதால் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட ஒருசில வாய்ப்புகள் மட்டுமே கிடைத்தன. இங்கே நீண்ட தூரம் நடந்து சென்று இந்த நாடு எவ்வளவு அழகாக உள்ளது? இந்த இடம் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்பதை தற்போது தெரிந்துகொள்ள முடிகிறது. இது ஒரு மகிழ்ச்சியான தருணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கங்குலியை நியமித்தால் அணி மேலும் பலமாகும்

(கொல்கத்தா)

இந்திய அணியின் பயிற்சியாளர் டன்கன் பிளட்சருக்கு பதிலாக சரியான மாற்றாக கங்குலி இருப்பார். கங்குலியைப் பயிற்சியாளராக நியமித்தால் இந்திய அணிக்கு பலமாகவே அமையும் என இந்திய முன்னாள் கப்டன் குண்டப்பா விஸ்வநாத் கூறியுள்ளார்.

கரி கிர்ஸ்டன் இந்திய அணியின் பயிற்சியாளராக ஆக முடிகிறது என்றால், ஏன் கங்குலியை நியமிக்க கூடாது? ஆனால் இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபை மற்றும் கங்குலியின் முடிவை பொறுத்தே எல்லாம் உள்ளது. கங்குலி சிறந்த வீரர். அவர் தலைமை ஏற்ற பின்னரே இந்திய அணியின் திறமைகள் அதிகம் வெளிப்பட்டது. அதேபோன்று அவரைப் பயிற்சியாளராக நியமித்தால் நிச்சயம் இந்திய அணியின் வளர்ச்சிக்கு வித்திடுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அவரைப் போன்ற போராடும் குணமுடையோரே இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மல்லாகம் நியூவேறியஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப் பந்தாட்டப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணி விருந்தினர்களுடன் இருப்பதைக் காணலாம். இப்போட்டித் தொடரில் புத்தூர் கலைமதி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாவட்ட கூடைப்பந்து இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழ கங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றைய தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில், 13 கூடைப்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்ற உள்ளன. மேற்படி கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

# சங்கானை ஐக்கியம் அபார வெற்றி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை தெற்கு கழுகு விளையாட்டுக்கழகத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் சங்கானை ஐக்கியம் அணி அபார வெறறிபெற்றது.

கரவெட்டி ஐங்கரன் அணிக்கும், சங்கானை ஐக்கியம் அணிக்குமிடையில் இடம்பெற்ற இப்போட்டி கடந்த வாரம் இடம்பெற்றது. நாண யச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சங்கானை ஐக்கியம் அணி 10 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விஜய் 13, சோதி, பூபதி தலா ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரகு, நிருபன், ரமேஷ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 67 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கர வெட்டி ஐங்கரன் அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களைப் பறிக்கொடுத்து திணறி வந்தது. இந்நிலையில் இணைந்த கவி அணி யின் நிலையை உணர்ந்து தாக்குப் பிடித்தார். இறுதியில் கரவெட்டி ஐங்கரன் அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றுத் தோல் வியைத் தழுவியது. இதில் கவி 11, நிதர்சன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேஷ் மூன்று, பூபதி, அக்தர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# ஜே.பி.எல். ருவென்ரி-20 ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் (ஜே.பி.எல்) கிரிக் கெட் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம் பமாகவுள்ளன. இரண்டாவது ஆண்டாக நடைபெற வுள்ள இந்த கிரிக்கெட் போட்டி இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

முதல் சுற்றில் 13 அணிகள் இரண்டு பிரிவுகளாக மோதுவதுடன் இரண்டாம் சுற்றில் முதல் சுற்றில் வெற்றி பெற்ற நான்கு அணிகளுடன் கடந்தாண்டு குழு நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆறு அணி கலந்துகொண்டு மோதவுள்ளன.

கடந்தாண்டு முதல் தடவையாக இடம்பெற்ற வேளையில் யாழ். மாவட்டத்தில் முன்னணியில் நின்ற எட்டு அணிகள மட்டும் தெரிவு செய்யப்பட்டு போட்டி இடம்பெற்றது.

இந்தாண்டு முதல் சுற்றில் புதிய அணிகள் பதின்மூன்றும் இரண்டாம் சுற்றில் ஏழு அணிகளும் இணைக்கப்பட்டு இம்முறை யாழ். மாவட்டத்தில் உள்ள 19 அணிகள் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன.

முதல் சுற்றில் மோதவுள்ள அணிகளின் விபரங்கள்: குழு 'ஏ' யில் இடம்பெற்றுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

வடமராட்சி ஈகிள் விளையாட்டுக் கழகம், அரி யாலை விளையாட்டுக் கழகம், கந்தர்மடம் நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம், தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழகம், சுன்னாகம் ஸ்கந்தா ஸ்டார் விளையாட்டுக் கழகம், வண்ணார்பண்ணை ஸ்ரீ ஸ்ரீகாமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம்.

குழு 'பி'யில் இடம்பெற்றுள்ள கழகங்களின் விப ரம் வருமாறு:

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம், சுழிபுரம் விக்டோறியா விளையாட்டுக் கழகம், தெல்லிப்பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளை யாட்டுக் கழகம், திருநெல்வேலி வை. எம். எச். ஏ. விளையாட்டுக் கழகம், அரியாலை ஸ்டான்லி விளை யாட்டுக் கழகம்.

முதல் சுற்றில் வெற்றிபெற்று முதல் இரண்டு இடங்களைப் பெறும் கழகங்கள் இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெறுகின்றன.

இரண்டாம் சுற்றில் குழு 'ஏ'யில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்துடன் முதல் சுற்றில் வெற்றி பெற்ற 'ஏ' குழுவில் முதலாம் இடம் பிடிக்கும் குழுவில் இரண்டாம் இடம்பெற்ற அணி களும் இடம்பெறும்.

குழு 'பி' யில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம், கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் மற்றும் முதல் சுற்றில் வெற்றிபெற்ற 'பி' க்குழுவில் முதலாம் இடம் 'ஏ' க்குழுவில் இரண்டாம் இடம்பெற்ற அணிகளும் மோதவுள்ளன.

போட்டி ஏற்பாடு குறித்து அமைப்பாளர்கள் குறிப்பிடுகையில், இந்த ஆண்டு யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அணிகளையும் போட்டிகளில் பங்குபெறச் செய்வதே எமது நோக்கம்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு மாவட்டத் திலுள்ள 19 அணிகள் பங்குபற்றுவதில் எமக்கு மகிழ்ச்சி. இத்தொடரின் மூலம் யாழ். மாவட்டத்தில் சிறந்த வீரர்கள் உருவாக வழிவகுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு அதிகம் இருக்கின்றது எனத் தெரி வித்தனர்.

# சமநிலையில் நிறைவடைந்த சென். ஜோன்ஸ், டிரிண்டிக் கல்லூரி ஆட்டம்

(கண்டி)

கண்டி டிரிண்டிக் கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும், கண்டி டிரிண்டிக் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 21,22 ஆம் திகதி களில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றது. சிநேகபூர்வமாக நடைபெற்ற இப்போட்டியில் இரு கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு அணியினர் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய கண்டி டிரிண்டிக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்து வீச்சால் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்ததுடன் மெதுவாகவே ஓட்டங்களைப் பெறமுடிந்தது. இறுதியில் கண்டி டிரிண்டிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கவின் 43, அவிஸ்கா 38, புவுது 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அமிதயன் 26 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், பிருந்தாபன் 56 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அனோஜன் 17, பிருந்தபன் 22, பிளமிங் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தசலர், புவுது ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகவிருந்த நிலையில் கனமழை பெய்ததால் போட்டி கைவிடப்பட்டது. இதன் மூலம் வெற்றிதோல்வியின்றி இப்போட்டி நிறைவடைந்தது. (எஸ்.பி.)



வடக்கு மாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ண பூப்பந்தாட்டப் போட்டியில் கல்வி அமைச்சு அணி இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. கல்வி அமைச்சு அணிக்கான கிண்ணத்தை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி வழங்க அணித் தலைவி தியாகன் சரிதா பெற்றுக்கொள்வதைக் காணலாம். (படம் : கே. நந்தகுமார்)



# தோழர் பாலன் கடிதத்திலிருந்து...

**2012** கழிந்து விட்டது. 2013 பிறந்துவிட்டது. வழமைபோல் வாழ்த்துக்களும் புதுவருட தீர்மானங்களும் வந்து போகின்றன. ஆனால் பரந்துபட்ட மக்கள் வாழ்வில் எந்த முன்னேற்றமும் நிகழவில்லை. மாறாக மேலும் மேலும் மக்கள் மீது சுமைகள் சுமத்தப்படுகின்றன.

தற்போது மக்களுக்காக சிலுவை சுமக்க யேசுபிரான் பிறக்கவில்லை. ஒருவேளை அவர் தமிழனாக பிறந்திருந்தால் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டிருப்பார். அதில் தப்பியிருந்தால் தமிழ்நாட்டில் சிலுவையை விடக் கொடிய சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருப்பார்.

பிள்ளையார் முருகன் கண்ணன் யாரும் எம்மை பாதுகாக்கவில்லை. பாவம் அவர்கள்!. அவர்கள் ஆலயங்களைக்கூட குண்டு வீச்சில் இருந்து அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. இந்த நிலையில் எங்களை எப்படி காப்பாற்றுவது?

புத்தனின் பேரால் யுத்தம் நடந்தது. இது தெரிந்துதான் என்னவோ புத்தர் எப்போதோ சமாதி அடைந்துவிட்டார். இன்று இந்த அக்கிரமங்களை காண சகிக்காமல் அவர் இரத்தக் கண்ணீர் வடிக்கக்கூடும்.


என்ன செய்வது? நாம் படைத்த கடவுள்கள் எம்மை காப்பாற்றக்கூடும் என நம்பினோம். அவர்கள் காப்பாற்றவில்லை. இறுதியில் எமது தலைவர்கள் காப்பாற்றுவார்கள் என்று நம்பினோம். அவர்களும் கைவிட்டுவிட்டார்கள். அவர்களின் தவறுகளாலும் துரோகங்களாலும் தொடர்ந்தும் அடிமையாக இருக்கின்றோம்.

எமது நாடு சிறிய தீவு. ஆனால் சொர்க்க தீவு. இருந்தும் சந்தோசமாக வாழமுடியாமல் சபிக்கப்பட்டவர்கள் போல் தொடர்ந்தும் கஷ்ட நிலையில் உள்ளோம். வரலாற்றில் நாம் எப்போதும் அடிமைத்தனத்திற்கு எதிராக போராடி வந்திருக்கிறோம். இருந்தும் இன்னும் விடிவு வரவில்லை. ஏனெனில் இதற்கு காரணம் தலைமைகளின் துரோகங்கள் என்பதை இன்னும் எமது மக்கள் புரிந்து கொள்ளவில்லை?

நாம் பிள்ளை பெற வேண்டுமாயின் நாம்தான் வயிற்றுவலியை பொறுக்க வேண்டும். எமக்காக இன்னொருவர் எப்படி பிள்ளை பெற முடியாதோ அது போல் எமக்கு விடுதலை நாம்தான் பெற வேண்டும். ஆனால் எமது தலைவர்களோ அமெரிக்கா வரும்! நோர்வே வரும்! இந்தியா வரும்! என்று படம் காட்டினார்கள். இன்று வைகோ வருவார்! சீமான் வருவார்! என்று படம் காட்டுகிறார்கள். "இவர்கள் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டால் "நீ துரோகி" என்று பட்டம் சூட்டுகின்றனர்.

புலிகளின் தவறுகளை சுட்டிக்காட்டினால் "நீ அரசின் கைக்கூலி" என்று முத்திரை குத்துகின்றனர். அரசின் தவறுகளை சுட்டிக்காட்டினால் "நீ புலியின் வால்" என்று முத்திரை குத்துகின்றனர். ஆனால் இவை இரண்டுக்கும் வெளியே மக்கள் சார்ந்து உண்மையான ஒரு பக்கம் இருக்க முடியும் என்ற யதார்த்தத்தை எப்பதான் புரிந்து கொள்ளப் போகின்றனரோ?

# ஏ... கிறுக்கா!




**எ**ந்த நேரத்தில் கூட்டம் என்றாலும் பெரியார் குறிப்பிட்ட நேரத்தில் மேடையில் இருப்பார். ஆனால் கூட்டம் தொடங்கி ஒருமணி நேரத்திற்குப் பிறகு தான் அண்ணா வருவார். அவரைப் பார்த்ததும் "அண்ணா வாழ்க" என்று உரத்த குரலில் கூட்டத்தினர் முழக்கமிடுவர். அந்த ஒலிக்கிடையே வந்து மேடையில் அமர்வார் அண்ணா. இதனால் அவர் வரும் நேரத்தில் மேடையில் யார் முழங்கிக் கொண்டிருந்தாலும் தொடர்ந்து பேச முடியாமல் போகும். சர்வக் கட்சிக் கூட்டமாக இருந்தால் அதில் பேசுகின்ற மற்ற கட்சித் தலைவர்களுக்கும் இந்த சோதனை நடக்கும். ஆனால் அந்த அண்ணாவுக்கும் இதுபோல் ஒரு சோதனை 1960ஆம் ஆண்டு ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது நேரிட்டது. அப்போது எம்.ஜி.ஆர். வரவே கூட்டத்தினர் ஒரேயடியாக ஆரவாரம் செய்ய அண்ணாவாலேயே சில நொடிகள் பேச முடியாத நிலை ஏற்பட்டது. இதே போன்ற சோதனை காமராஜருக்கு ஏற்பட்டபோது அதை அவர் சாமர்த்தியமாக சமாளித்தார். எப்படி?

1964ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கட்சி இந்திய தேசியக் காங்கிரஸோடு இணைந்த கூட்டம். திருச்சியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பலர் பேசிய பின் காமராஜர் பேசிக் கொண்டிருந்தார். நாட்டு நடப்பு, மக்கள் நிலை பற்றி ஆழமாகவும் அழுத்தமாகவும் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. கைத்தட்டல் வந்த இடத்தை தலைவர் கூர்ந்து பார்த்தார். அங்கே வந்து கொண்டிருந்தவர் கவியரசர் கண்ணதாசன்! அவரைப் பார்த்துவிட்ட காமராஜர், "யாரு? கண்ணதாசனா? ஏ...கிறுக்கா...அப்படியே உட்காரு!" என்று ஒலிபெருக்கியிலே ஒருபோடு போட்டார். கண்ணதாசனும் அப்படியே தரையில் அமர்ந்தார்!

தலைவர் உரைக்குப் பிறகு கண்ணதாசன் என்ற எரிமலை முழக்கமிட கூட்டம் நிறைவு பெற்றது.

தலைவர் காமராஜர் தன்னை, "கிறுக்கா" என்று சொல்லி வாழ்த்த மாட்டாரா என்று ஏங்கியவர்கள் பலர் உண்டு. ஏனெனில் தலைவர் தனது இதயப்பூர்வமான அன்பை [illegible]ச் சொல் மூலமே வெளிப்படுத்துவார்!

**('நெஞ்சில் நிற்கும் நிகழ்ச்சிகள்' நூலில் இளசை சுந்தரம்)**



# தெளிவு!

**நா**ன் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்த போது தி.ஜானகிராமனின் நண்பரான கரிச்சான்குஞ்சு அவர்களை மன்னார்குடியில் சந்திக்க நேர்ந்தது. கரிச்சான்குஞ்சு என்ற திரு. நாராயண சுவாமி திமிரான நல்ல மனிதர்.

இடுப்பில் ஒரு நாலுமுழ வேட்டி. சட்டை போலும் இல்லாத பனியன் போலும் இல்லாத ஒரு மேலுடுப்பு. குள்ளம். குண்டு, குடுகுடுவென்ற நடை, உ[illegible] பேச்சு, எது பற்றியும் கவலையில்[illegible] ஓர் அலட்டல். தன்னைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகின்ற ஒரு தன்மை என்று முதல் சில நிமிடங்களிலேயே அவர் என்னைக் கவர்ந்துவிட்டார்.

வேதங்கள் மீதும் ஆசார அனுஷ்டானங்களின் மீதும் நம்பிக்கையுள்ளவர். ஆனால் கடைப்பிடிக்காதவர். தன்னை ஹிந்து என்று சொல்லிக் கொள்ளும் ஆசையுள்ளவர். அதற்காக திருச்சின்னங்கள் எதுவும் அணியாதவர். நியமங்கள் எதுவும் செய்யாதவர். அவரிடம் பல நிறைகள் இருந்தன. ஆனால் அலட்டிக் கொள்ளவில்லை. அவரிடம் பல குறைகள் இருந்தன. ஆனால் அதை அவர் மறைத்துக் கொள்ளவில்லை.

மனைவியின் கழுத்திலிருந்த தாலியை இரவோடு இரவாகக் கழற்றிக் கொண்டு போய் சீட்டு ஆடித் தோற்ற ஒரு கதை எழுதியிருந்தார். நான் அதைப் பாராட்டி இப்படியும் மனிதர்கள் உண்டா என்றால், உன் எதிரே உட்கார்ந்திருக்கிறேனே, நான்தான் இதைச் செய்தேன் என்று சாதாரணமாகச் சொன்னார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"இவ்ளோ பெரிய தப்பு பண்ணியிருக்கீங்களே, வெட்கமா இல்லையா?"

"வெட்கப்பட்டதனாலதான் இதைக் கதையா எழுதினேன். அது சரின்னு நினைச்சுக்கொண்டிருந்தா ஏன் கதை எழுதப் போறேன்!" என்று உரத்த குரலில் சொல்லிச் சிரித்தார். எனக்கும் சிரிப்பு வந்தது.

வாழ்க்கையில் முற்றிலும் தெளிவான ஒரு மனிதரோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்று புரிந்தது.

**('காதலாகிக் கனிந்து...' நூலில் பாலகுமாரன்)**

# இப்படியும் நேர்முகத்தேர்வு!



**அ**மெரிக்காவைச் சேர்ந்த பிரபலமான பொப் பாடகி, கேர்ட்னி ஸ்டட்டன். விரைவில், ஒரு பொப் அல்பம் தயாரிக்க திட்டமிட்டுள்ளார். இதில் நடிப்பதற்கு, ஒரு ஆண் மொடல் தேவைப்பட்டது. இதற்காக, தன் அலுவலகத்தில் சமீபத்தில் நேர்முகத் தேர்வை நடத்தினார். தன் தாயார், கணவர் ஆகியோருடன் அமர்ந்து, ஒவ்வொருவராக வரவழைத்து, ஒவ்வொருவருக்கும், மதிப்பெண் போட்டு, நேர்முகத் தேர்வை நடத்தினார்.

திடீரென என்ன நினைத்தாரோ தெரியவில்லை. "பொப் அல்பத்தில், என்னுடன் பங்கேற்கும் மொடல், சட்டையில்லாமல் தான் நடிக்க வேண்டும். எனவே, நேர்முகத் தேர்வில் பங்கேற்கும் ஆண்கள், சட்டையை கழற்றி விட்டு, போஸ் கொடுக்க வேண்டும். அவர்களின் உடல் கட்டை பார்த்து, பொருத்தமானவரை தேர்வு செய்வேன்..." என்றார்.

கேர்ட்னி ஸ்டட்டனின், இந்த ஆசையை, அவரது கணவரும், வழி மொழிந்தார். இதன்பின், நேர்முகத் தேர்வில் பங்கேற்றவர்கள், தங்கள் சட்டையை கழற்றி விட்டு, போஸ் கொடுத்தனர். நீண்ட நேரத்துக்கு பின், அவர்களில் ஒருவரை, தன் அல்பத்துக்காக தேர்வு செய்தார்.

கேர்ட்னி ஸ்டட்டனின், இந்த விசித்திரமான நேர்முகத் தேர்வு, அமெரிக்காவில் உள்ள சமூக ஆர்வலர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு போனஸ் தகவல்: கேர்ட்னிக்கு 18 வயது தான் ஆகிறது, அவரது கணவர் டக்ஹட்சனுக்கு 52 வயது.

# வாலிக்கு இல்லாத தகுதி...?



**இ**ராமபாணத்தை மார்பில் தாங்கி விழுந்து கிடந்தான் வாலி.

அவன் இராமன் தன் மீது அம்பெய்த காரணத்தை அறிகிறான்.

உடனே, "இராமா, சீதையைச் சிறை மீட்க நீ என் துணையை நாடியிருக்கக் கூடாதா? ஒரு நொடியில் அதைச் சாதித்துக் கொடுத்திருப்பேனே? என்னைக் கண்டாலே அஞ்சும் இராவணன். நான் ஒரு வார்த்தை சொன்னாலே சீதையை அனைத்து மரியாதைகளுடன் அழைத்து வந்து உன்னிடம் ஒப்படைத்து விட்டு மன்னிப்பும் கேட்கச் செய்திருப்பேனே" என்றான் வாலி.

"வாலி, நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். பிறன் மனைவியைச் சிறை எடுத்துச் சென்றவன் இராவணன். நீயும் அதே தவறைச் செய்திருப்பவன்தான். ஒரு குற்றவாளியை எதிர்கொள்ள, இன்னொரு குற்றவாளியையா துணை கொள்வது? சுக்ரீவன் இன்று நானிருக்கும் நிலையிலேயே இருப்பவன். அவன் துணையுடன் இராவணனைத் தண்டித்துச் சீதையைச் சிறை மீட்பதுதான் சரியானது" என்றான் ராமன்.

**கோ**டியாய் கோடியாய், சம்பளம் கொடுத்து, சூப்பர் டூப்பர்களைப் போட்டு படமெடுக்கலாம். ஏகப்பட்ட மெகாஹிட் படங்கள், கொடுத்த

# கோலிவுட் 2012

— அதிஷா —

இயக்குனர் இயக்கலாம். உலகில் எங்குமில்லாத தொழில்நுட்ப கலைஞர்களை வரவழைத்து உபயோகிக்கலாம். அயல்நாடுகளின் எந்தப் பகுதியிலும் போய் படம்பிடித்துவரலாம்.

ஆனால், கோலிவுட்டில், ஒரு ஸ்மோல் ஹிட் கொடுப்பது அத்தனை சுலபமல்ல.

கடைக்கோடி ரசிகனுக்கும், ஞானம் வந்துவிட்டது. இனி அவனை அவ்வளவு சுலபமாக ஏமாற்றமுடியாது. (நிறையவே கஷ்டப்படவேண்டும்!)

போலியான, ஜாலாக்கு ஜோலக்குகளை, காட்டி ஏமாற்றிய காலமெல்லாம் மலையேறிப்போச்சு! அரைத்த மாவை அரைத்தால் அடிதான் விழும்.

யதார்த்தபடமோ, மசாலாபடமோ, காமெடி படமோ, இல்லை த்ரில்லரோ, நிறைய சுவாரஸ்யமும், திரைக்கதையில், கொஞ்சமாவது புத்திசாலித்தனமும் வேண்டும்.

புதுமையும், சுவாரஸ்யமும், இல்லையென்றால், அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகர்களின் படமும், வந்த வேகத்தில் குப்பைத்தொட்டிக்கு கடாசப்படும் என்பதை தமிழ் இரசிகர்கள் கோலிவுட்டுக்கு உணர்த்திய ஆண்டு 2012!

சகுனி, பில்லா, மாற்றான், முகமூடி, அரவான், தனுஷின் 3, பேரரசு-win திருத்தணி, மாதிரியான மெகாபட்ஜெட் கொடுமைகளை, வெளிவந்த இரண்டாம் நாளே ஓட ஓட அடித்து விரட்டினர். நீர்ப்பறவை, மெரீனா, கிருஷ்ணவேணி பஞ்சாலை, தோனி மாதிரியான, அறிவுரைகளின் ஓவர்டோஸ்களுக்கும், அதோகதி தான்.

ரசிகனை மதிப்பவனுக்கு வெற்றி நிச்சயம்.

உன்னிடம் கடின உழைப்பும் புதுமையும் இருக்கிறதா, இந்தா பிடி வெற்றியை..! என அள்ளித்தர தயாராயிருக்கிறான் ரசிகன். கோலிவுட் பிதாமகன்களுக்கு 2012 கற்றுக்கொடுத்திருப்பது அதைத்தான். இத்தனை ஆண்டுகளும் வெட்டி ஹீரோயிசம், அரைகுறை ஆடைகளோடு உலா-வரும் மக்கு ஹீரோயின்கள், ஏய் ஏய்! என்று கத்திக்கொண்டே அரிவாள் சுழற்றிய டாடா சுமோ வில்லன்களையும் காட்டி ஏமாற்றிய பழைய பருப்புகள் இனி இங்கே வேகாது!

பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், அட்டக்கத்தி மாதிரியான, வித்தியாச படங்கள் நம்பிக்கை தந்தன. மசாலா படங்களுக்கான மார்க்கெட் சரிந்த போது, துப்பாக்கி வந்து காப்பாற்றியது. தெலுங்கு இயக்குனர் எஸ்.எஸ். ராஜமௌலி, ஒரு சின்ன ஈயை வைத்துக்கொண்டு, கோலிவுட்டின் அசகாயசூரர்களையே தோற்கடித்தார்.

ஏகப்பட்ட, புத்தம் புது இயக்குனர்களின், புதிய சிந்தனைகள் வியக்கவைத்தன. கிடைத்த பட்ஜெட்டில், கிடைத்த தொழில்நுட்ப கலைஞர்களை வைத்துக்கொண்டு மெகாஹிட் படங்களை கொடுத்தனர்.

ஹரி'ங்கர், பாலாஜி மோகன், கமலக்கண்ணன், லட்சுமி ராமகிருஷ்ணன், பா.ரஞ்சித், மகிழ் திருமேனி, கார்த்திக் சுப்புராஜ், பாலாஜி தரணீதரன் என கை-நிறைய நம்பிக்கைகள்.

இந்த ஆண்டின், முதல் பாதி முழுக்க, வெறும் தோல்விகளை, மட்டுமே கொடுத்து படுத்த படுக்கையாய் கிடந்தது கோலிவுட். இந்த இளம் இயக்குனர்களின் வருகையும் அவர்களுடைய புதிய சிந்தனைகளும் முயற்சிகளும் "தமிழ்சினிமா தப்பிச்சிக்கும் பாஸ்" என்கிற எண்ணத்தை கொடுத்தது!

இந்த ஆண்டுக்கான, சிறந்த பத்து என்று ஒரு பட்டியலை தயார் செய்திருக்கிறேன்.

### ஒரு கல் ஒரு கண்ணாடி

அதே கதை, அதே சந்தானம், அதே காமெடி..




ஆனாலும், இயக்குனர் ராஜேஸுக்கு, தமிழ் ரசிகர்களை எங்கே அடித்தால், விழுந்து விழுந்து சிரிப்பார்கள், என்கிற இரகசியம் தெரிந்துவிட்டது. அதன் பலன் ஓகேஓகேவிலும்.. படத்தை பார்த்து தமிழுலகமே விழுந்து விழுந்து சிரித்தது. பேரன் உதயநிதி ஸ்டாலின் நடித்த படமென்பதால், தாத்தா கலைஞர் கூட, ஆட்சி கைவிட்டுப்போன கவலையை மறந்து, ஒரு இரண்டரை மணிநேரம் விலா நோக சிரித்திருப்பார்.

### வழக்குஎண் 18/9

ஏகப்பட்ட விருதுகளை, ஏற்கனவே குவிக்க ஆரம்பித்துவிட்ட திரைப்படம்.




எக்கச்சக்க, சமூக பிரச்சினைகளை, ஒரே படத்தில், போட்டு திணித்திருந்தார் பாலாஜி சக்திவேல். வறியவர்களின் சிக்கலான வாழ்க்கையை அதன் இயல்போடு படமாக்கியிருந்தார். அதோடு, மிடில் கிளாஸ் குழந்தைகளின், அதுவும் பெண் குழந்தைகளின், போக்கினை நன்றாகவே காட்சிப்படுத்தியிருந்தார். விருதுப்படம்!

### தடையற தாக்க

அருண்விஜயின் ராசியோ என்னவோ! மிகச்சிறந்த படமாகவே இருந்தும், யார்கண்ணிலும் படாமல், தியேட்டர்களில் வந்ததும் தெரியாமல், போனதும் தெரியாமல், காணாமல் போனது. இந்த ஆண்டில் வெளியான பாராட்டப்பட வேண்டிய ஒரே ஆக்சன் படம் இதுதான். அருண்விஜய்க்கு பதிலாக அஜித்தோ விஜயோ நடித்திருந்தால் மெகாஹிட் ஆகியிருக்கலாம். இயக்குனர் மகிழ்திருமேனி தமிழ்சினிமாவின் மிகமுக்கியமான இயக்குனராக வருவார்..




### நான் ஈ

தெலுங்கில், பல மெகாஹிட்களை, கொடுத்த இயக்குனர் எஸ்.எஸ். ராஜமௌலி. இந்த முறை, ஒரு தம்மாத் தூண்டு ஈயையும், கன்னட நடிகர் ஒருவரையும், வைத்துக்கொண்டு இந்தியா மொத்தத்தினையும் கலக்கினார். முழுமையான ஈடுபாடும், அர்ப்பணிப்பும் இருந்தால், ஈயை வைத்துக்கூட, சூப்பர் டூப்பர் ஹிட் கொடுக்க முடியுமென நிரூபித்தார். இந்த ஈ நம்மூர் ஹீரோக்களுக்கே கிலியாக அமைந்தது.




### மதுபானக்கடை

இது, சூப்பர் ஹிட் படம் கிடையாது. ஏன், ஹிட் கூட கிடையாது. இருந்தும் இது ஒரு மிகமுக்கியமான முயற்சி. ஹொலிவுட் பாணி, இன்டிபென்டென்ட் திரைப்படம். அதோடு கதையே இல்லாமல் வெறும் சம்பவங்களை கோர்த்து தமிழ்நாட்டின் குறுக்கு வெட்டுத்தோற்றத்தை காட்சிப்படுத்தியிருந்தார் கமலக்கண்ணன்.




### அட்டக்கத்தி




ஆடி போனா ஆவணி இவ ஆள மயக்கும் தாவணி. என ஊரே பாடிக்கொண்டு திரிந்தது. வித்தியாசமான கதை சொல்லல், படமாக்கல், யதார்த்தமான நடிகர்கள், புதுமையான களம், ஏடாகூடமான இசை என அனைவரையும் வெகுவாக கவர்ந்த படம். இன்னும் கூட, சிறப்பாக படமாக்கியிருக்கலாமோ என்றும் நினைக்க வைத்தாலும், அறிமுக இயக்குனரான ரஞ்சித், தனக்கு கிடைத்த மிகச்சிறிய பட்ஜெட்டில் சிறப்பான படத்தையே எடுத்திருந்தார்.





### சுந்தரபாண்டியன்

மெகாசீரியல்களின், வருகைக்குப் பின், குடும்ப திரைப்படங்கள்(!) முற்றிலுமாக அழிந்துவிட்டன. இதுவும் கூட குடும்பப்படம்தான், என்றாலும், அதற்கு நடுவில் காதல், துரோ-கம், சதி மாதிரியான விஷயங்களை மிகசரியான கலவையில் கொடுத்து ஹிட்டடித்தார் சசிகுமார்.

### பீட்சா

கார்த்திக் சுப்புராஜ், குறும்படங்கள் எடுத்து எடுத்து, அது கொடுத்த பயிற்சியில், குறும்படமாக எடுத்துவிடக் கூடிய ஒரு குட்டிக்கதையை மிகசிறப்பாக, எதிர்பாராத திருப்பங்களுடன், நம்மை பயமுறுத்தி, கடுப்பாக்கி, அட என்று ஆச்சர்யப்பட வைத்தார். விஜய் சேதுபதியின் சிறப்பான நடிப்புக்காக, படத்தை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.




### துப்பாக்கி

தன்னுடைய, ஹீரோயிச கிரீடத்தை, நண்பனிலேயே கழட்டி வைத்துவிட்டார் இளையதளபதி விஜய். ஆனால் அதுகூட ஷங்கர் படமென்பதால் அப்படியிருக்கும்ப்பா என்றவர்களை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார். துப்பாக்கியில், தன்னுடைய, வருங்கால அமெரிக்க ஜனாதிபதி கனவையெல்லாம், தூக்கிப்போட்டுவிட்டு, தன் இயல்பான துடிப்போடு எல்லோர்க்கும் பிடித்த பக்கத்துவீட்டு பையனைப்போலவே நடித்திருந்தார். இந்தவருடத்தின் அதிக வசூலை வாரிக்குவித்த படம் இதுதானாம்.. விஜய் இதையே கன்டினியூ பண்ணினார்னா நமக்கு நல்லது! இன்னொரு சுறாவை, வேட்டைக்காரனை, இந்த நாடு தாங்காது சாமியோவ்!




### நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்

இன்னொரு சிரிப்பு படம்தான் இதுவும். ஆனால்.



படம் முழுக்க நம்மை சிரிக்க வைக்கணுமே, என்று தமிழ்சினிமாவின் க்ளிஷேவான சேஷ்டைகள் எதையுமே பண்ணாமல், என்னாச்சி, ப்பா பேய் மாதிரி இருக்காடா மாதிரியான சில வசனங்களிலேயே சிரிக்க வைத்து அசத்திய இளைஞர்களின் படம். காணாமல் போன யதார்த்த ஜனரஞ்சக தமிழ் சினிமாவை, எளிய பாணியில் கண்டுபிடித்துக் கொடுத்த படம்.

வாரம் ஒரு கிராமம்



# அடிமைத்தளை அறுத்த வரலாற்றை ஆளப் பதிவாக்கிய நாகர்கோவில் கிராமம்

வடமராட்சிப் பிரிவின் தலைநகரம் என்று கூறப்படும் பருத்தித்துறைக்கு கிழக்கே சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது நாகர் கோவில் கிராமம். இது கிழக்கு மேற்கு தெற்கு என மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. சுமார் 1000 சனத் தொகையைக் கொண்டது. கூடுதலானோர் சிவனோபாயமாக கடற்தொழிலையே மையமாகக் கொண்டுள்ளனர். நாகர்கோவில் மகாவித்தியாலயம் கனிஷ்டதரபாடசாலை என இரு பாடசாலைகள் உள்ளன. சுமார் 2000 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றனர். இக் கிராமத்தில் சரித்திர புகழ் பெற்ற பூர்வீக நாக தம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. இதன் அடிப்படையில்தான் நாகர் கோவில் எனும் பெயர் வழங்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஒருகாலத்தில் இவ்வூரில் நாகர் என்னும் சாதியர் வசித்து வந்ததாகவும் மேல் நாட்டவர் இவ்வூரில் அமைந்துள்ள கௌத்தந்துறைமௌகம் ஊடாக கப்பலில் வியாபார நோக்கமாக வந்து இவ்வூர் மக்களைப் பிடித்து பலவந்தமாகக் கப்பலில் ஏற்றிச்செல்கின்றபோது அக்கப்பலின் பாய்மரத்தில் ஒருபாம்பு இருக்கக் கண்டதுடன் கடலில்கொந்தளிப்பும் புயற்காற்றும் உண்டாகியதாகவும் அப்பொழுது கப்பலில் இருந்தஒருபெண் உன்மந்தனாகி (பக்திகலைகொண்டு) எனது பதிகளை இறக்கிவிட்டால் கப்பல்நகரும் என வாக்குக்கூறிய தாகவும், மக்களை இறக்கிய பின் புயற்காற்றும் கடற்கொந்தளிப்பும் அடங்கி பாய்மரத்தில் இருந்த நாகபாம்பு மாயமாக அகன்றுகாணாமற்போனதாகவும், அதன் பின்புதான் இப்பதிக்கு நாகர்கோவில் என்னும் பெயர் வழங்கிய வரலாறாயிற்று எனவும் கர்ணபரம்பரைக் கதைகள் பரவுகின்றன.

இக்கிராம மக்கள் ஐந்து தலை நாகலிங்கத்தை கருவறையில் ஸ்தாபித்து நாகதம் பிரானை வழிபடலாயினர். இக் கிராமத்தில் 99 வீதமானோர் இந்துக்களே ஆவர். விவசாயிகள் பயிர் செய்வதற்கு மழையை நம்பியிருப்பதால் வருமானம் குறைந்தவர்களாகவுள்ளனர். பலர் படித்து அரச பதவிகளிலும் ஆசிரிய, ஆசிரியைகளாகவும் உள்ளனர்.

இக்கிராமத்தில் யாரையாவது எச்சமயத்திலும் பாம்பு தீண்டினால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில்லை. நாகதம்பிரான் ஆலயத்திற்கு கொண்டு சென்று பூசகரிடம் கோயில் மருந்துவாங்கி உட்கொண்டும் கடித்த இடத்திற்கு பூசியும் விசத்தை நீக்குவது வழக்கம்.

இக்கிராமத்தில் மீன் சந்தை, மரக்கறிச்சந்தை, வர்த்தக ஸ்தாபனங்கள் என்பன அமைந்துள்ளன. வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளைகளை நிறுவி, மக்கள் பொருள்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் வசதிகளைச் செய்துள்ளது.


போக்குவரத்து வசதிகள் திறம்பட நடைபெறுகின்றன. வைத்தியசாலை அயற் கிராமமாகிய அம்பனில் அமைந்துள்ளது. அரச தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகம் மருதங்கேணியில் அமைந்துள்ளது.



முருகன் ஆலயம்




நாகதம்பிரான் ஆலயம்



புதிதாக அமைக்கப்பட்ட ஐந்து தலைகொண்ட நாகதம்பிரான்



நாகர்கோவில் தேவாலயம்




நாகதம்பிரான் ஆலயத்தின் முகப்புத்தோற்றம்



நாகர்கோவில் உதைபந்தாட்ட அணி வீரர்கள்



நாகர்கோவில் மகாவித்தியாலயம்




யாழ். மாவட்ட செயலகத்தின் 2103ஆம் ஆண்டுக்கான புதுவருட நிகழ்வு மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர், அனைத்து உத்தியோகத்தர்களும் அரச கொள்கைகளுக்கு அமைவாக மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டார். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# மாமரச் செய்கையாளர்களுக்கு விவசாய ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

மாங்கனிகளின் விளைச்சலை அதிகரித்து தரமான மாங்கனிகளைப் பெற்றுக் கொள்ள மாமரச் செய்கையாளர்களுக்கு உலக விவசாய ஸ்தாபனம் தேவையான ஆலோசனைகள் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் உபகரணங்களை அவ்வவ் பகுதி விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாக வழங்கவுள்ளது.

இது தொடர்பாக உலக விவசாய ஸ்தாபனம் மாமரச் செய்கையாளர்களுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலில், தரமான மாங்கனிகளை தொடர்ச்சியான அறுவடையில் பெற மாமரத்தின் எல்லாப் பகுதிக்கும் சூரிய ஒளி கிடைக்குமாறு மாமரங்களை தகுந்த பருவகாலங்களில் கத்தரிப்பதன் மூலம் தொடர்ச்சியான அறுவடையைப் பெறலாம். தேவையேற்படும் போது மென் கத்தரித்தல் மூலம் மாமரத்தினைப் பராமரித்து தரமான மாங்கனிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாமரங்களைக் கத்தரிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம். தாவரத்தின் எல்லாப் பகுதிக்கும் சூரிய ஒளி கிடைக்கப் பெறும். பருவகால்ங்களில் மட்டுமன்றி வருடம் பூராகவும் மாங்கனிகளைப் பெறலாம். நீர் உரவகைகளுக்கு தாவரங்கள் காட்டும் விளைத்திறன் அதிகரிக்கும் தாவரப்பராமரிப்பு இலகு ஆக்கப்படுவதுடன் தாவரத்தின் அழகுத் தன்மையும் பேணப்படும். மாமரங்களைக் கத்தரிப்பதற்கு விவசாயத் திணைக்களம் மாமரம் கத்தரிப்பதற்கான ஊக்குவிப்புக்கொடுப்பனவு மற்றும் உபகரணங்களை வழங்கும்.

இவற்றைப்பெற்று தகுந்த பருவகாலங்களில் மாமரங்களைக் கத்தரிப்போம். தரமான மாங்கனிகளைத் தொடர்ச்சியான அறுவடையில் பெறுவோம் எனத் தெரிவித்துள்ளது.

இதற்கான மேலதிக விபரங்களை மாமரச்செய்கையாளர்கள் தத்தம்பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இச் செயற்திட்டத்துக்கான அனுசரணையை உலக விவசாய ஸ்தாபனம் (F.A.O) வழங்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவின் ஹோட்டல் பயிற்சிநெறிக்கான கருத்தரங்குகள்

( கார்த்தி-சிகரம்)

மாதம் 50,000 ரூபா வருமானம், U.K மற்றும் அவுஸ்ரேலிய பட்டச் சான்றிதழ்கள், வேலைவாய்ப்பு என்பவற்றுடன் மலேசிய அரசாங்கத்தின் skills Malaysia INVITE திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஹோட்டல் பயிற்சிநெறி தொடர்பான விளக்கக் கருத்தரங்குகள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளன. சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டல் பிரிவால் நடாத்தப்படும் இந்தக் கருத்தரங்குகளில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா தம்பா ஹோட்டலிலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட் டலிலும் நடைபெறவுள்ளன.

சிகரம் நிறுவனம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் SEGI University & skills Malaysia INVITE பிரதிநிதி Ryan Kok நேரடியாக கலந்துகொண்டு பயிற்சிநெறி தொடர்பான விளக்கங்களையும், அதனைத் தொடர்வதற்கான அனுமதிகளையும் வழங்கவுள்ளார்.

க.பொ.த சாதாரணதரச் சித்தியுடனோ அல்லது 9 வருடம் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த எவரும் இந்த ஹோட்டல் பயிற்சிநெறியைத் தொடரமுடியும்.வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே வருமானத்துடன்கூடிய இந்தக் ஹோட்டல்பயிற்சிநெறிதொடர்பான பல விளக்க கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் சிகரம் நிறுவனம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் மற்றும் SEGI University & skills Malaysia INVITE பிரதிநிதி Ryan Kok ஆகியோர் கலந்துகொண்டு கற்கைநெறி தொடர்பான விளக்கங்களை வழங்கியதுடன், பல மாணவர்களுக்கு அனுமதிகளையும் வழங்கியுள்ளனர்.

சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினருடாகச் சென்ற ஒரு தொகுதி யாழ். மாணவர்கள் மலேசிய அரசாங்கத்தினால் SEGI பல்கலைக் கழகத்தினூடாக நடத்தப்படும் ஹோட்டல் பயிற்சிநெறியில் இணைந்துகொண்டனர்.

இதேவேளை, 2012 ஜனவரி இறுதியில் இரண்டாம் அணி மாணவர்கள் மலேசியா செல்லத் தயாராக உள்ளனர்.மலேசிய ஹோட்டல் பயிற்சிநெறியில் இணையவுள்ள மாணவர்கள் தமது ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்வதற்காக சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவால் மூன்று மாத ஆங்கில பயிற்சிகளும் வழங்கப்பட்டுவருகின்றன.




இந்தப் பயிற்சியை அடுத்தே இவர்கள் மலேசியாவில் தமது ஹோட்டல் பயிற்சிநெறியில் இணைக்கப்படுகின்றனர். ஆங்கிலத்தில் உரையாடுவதற்கான பயிற்சிகள், ஏதாவதொரு விடயம் பற்றி ஏனையவர்களுக்கு எவ்வாறு விளக்கமளிப்பது போன்ற பல்வேறுபட்ட பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

வெறுமனவே மாணவர்களை கற்கைநெறியைத் தொடர்வதற்காக மலேசியாவுக்கு அனுப்புவதுடன் மட்டும் நின்றுவிடாது, அந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் குறித்து தொடர்ந்தும் அவதானத்துடன் இருப்பதாகவும், பெற்றோருடன் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி மாணவர்கள் தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் சிகரம் நிறுவனப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்புக்களின்போது மலேசியாவில் ஹோட்டல் பயிற்சிநெறியில் இணைந்துள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், அவர்களுக்கான தங்குமிட வசதி, போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகள் மற்றும் பயிற்சியின் பின்னான தொழில் வாய்ப்பு மற்றும் மாணவர்களின் பயிற்சிகளின் அடைவு மட்டம் என்பன தொடர்பிலும் விளக்கமளிக்கப்படுகின்றது

# 2013 புத்தாண்டுப் பலன்கள்



## மிதுனம்

செய்நன்றியை ஒருபோதும் மறவாத நீங்கள், எதிரியாக நினைத்தவர்களுக்கும் நல்லதே நினைக்கும் குணம் படைத்தவர்கள். உங்களுக்கு 2ஆவது ராசியில் இந்த புத்தாண்டு பிறப்பதால் எதிர்பார்த்திருந்த பணம் வந்து சேரும். குடும்பத்தில் அமைதி பிறக்கும்.

அனுபவ பூர்வமாகவும் யதார்த்தமாகவும் பேசுவீர்கள். தடைப்பட்ட பல காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் இனி மனம் விட்டுப் பேசுவீர்கள். வீண் சந்தேகம் விலகும். குடும்ப வருமானத்தை உயர்த்த கூடுதல் நேரம் ஒதுக்கி உழைப்பீர்கள்.

வருடம் பிறக்கும்போது ராகு 5ஆம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் பிடிவாதம் அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் கவனமாக இருங்கள். இரத்த சோகை, மூட்டு வலி வரக்கூடும். தாய்மாமன், மாமி வகையில் செலவுகள் வந்துபோகும். எல்லோரையும் சந்தேகக் கண்ணுடன்தான் பார்ப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனத்தாங்கலும் வந்து செல்லும். கேது 11ஆம் வீட்டில் தொடர்வதால் வற்றிய பணப்பை நிரம்பும். கைமாற்றாக இருந்த கடனையும் தந்து முடிப்பீர்கள்.

பழைய கடனை அடைக்க வழி பிறக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர்கள், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வேற்று மொழி, மதத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். வீட்டில் தடைப்பட்ட சுபகாரியங்கள் ஏற்பாடாகும். சனிபகவான் ராசிக்கு 5ஆம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகள் உங்களை புரிந்து கொள்ளாமல் பேசுவார்கள். அவர்களின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்து நிறைவேற்றப் பாருங்கள். தாய்மாமன் வகையில் செலவுகளும் சின்னச் சின்ன மனஸ்தாபங்களும் வந்துபோகும்.

மே 28ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் நிற்பதால் அநாவசிய செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆக்கபூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்ல விதத்தில் முடியும். சிலருக்கு அயல்நாட்டுப் பயணம் அமையும். வாகன வசதி பெருகும்.

வெகுநாட்களாக போக நினைத்தும் தடைப்பட்டுக் கொண்டிருந்த கோயில் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மே 29ஆம் திகதி முதல் குருபகவான் வருடம் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே ஜென்ம குருவாக அமர்வதால் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். தேனொழுகப் பேசுகிறார்கள் என்று யாரையும் நம்பிவிட வேண்டாம். அடிக்கடி கோபப்பட்டு டென்ஷனாவீர்கள். உணவில் உப்பு, காரத்தை குறைத்துக் கொள்ளுங்கள். சுடவைத்த நீரை அருந்துங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. இரத்த அழுத்தம் அதிகரிக்கக் கூடும். பிள்ளைகள் சில நேரங்களில் உங்களை புரிந்து கொள்ளாமல் பேசுவார்கள். உணர்ச்சி வசப்படாமல் எந்த முடிவும் எடுப்பது நல்லது.

குடும்பத்தில் சுபச் செலவுகள் இருந்து கொண்டேயிருக்கும். ராசிக்கு 6ஆம் வீட்டில் சுக்கிரன் நிற்கும்போது இந்தாண்டு பிறப்பதால் சிறுசிறு விபத்துகள் வரக்கூடும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சளித் தொந்தரவு இருக்கும். சைனஸ் கோளாறால் லேசாக தலைவலி வந்துபோகும். செவ்வாய் 8இல் நிற்கும்போது இந்தாண்டு பிறப்பதால் உடன் பிறந்தவர்களுடன் மனஸ்தாபங்கள் வரும். சொத்து விஷயங்களை சுமுகமாகப் பேசித் தீர்க்கப் பாருங்கள். இல்லறத்துணையுடன் கருத்துமோதல் வரக்கூடும். அரசாங்க அதிகாரிகளை ப்கைத்துக் கொள்ளாதீர்கள்.. அண்டை அயலாருடன் அளவாகப் பழகுங்கள்.

கன்னிப் பெண்களே! உயர்கல்வியில் அலட்சியப் போக்கு வேண்டாம். காதல் விவகாரத்தை தள்ளி வையுங்கள். பெற்றோரின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளியுங்கள்.

மாணவர்களே! ஏனோ தானோ என்றில்லாமல் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். கணிதம், அறிவியல் பாடங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். ஆசிரியர்களிடம் சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! உட்பூசல்களில் தலையிடாமல் ஒதுங்கியிருங்கள். இருக்கும் பதவியை தக்க வைத்துக் கொள்ள கொஞ்சம் போராட வேண்டிருக்கும்.

வியாபாரிகளே! பழைய வாடிக்கையாளர்களை ஈர்க்க புதுத் திட்டங்களை செயல்படுத்துவீர்கள். மற்றவர்கள் சொல்கிறார்கள் என நினைத்து பெரிய முதலீடுகளை போட்டு மாட்டிக் கொள்ளாதீர்கள். ஸ்டேஷனரி, பப்ளிகேஷன், உணவு, எலெக்ட்ரிக்கல்ஸ், ட்ராவல்ஸ், கட்டிட உதிரி பாகங்களால் ஆதாயமடைவீர்கள். சங்கத்தின் சார்பில் கௌரவப் பதவிகள் தேடிவரும். புதிய பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். கணினி துறையினரே, புதிய வாய்ப்புகள் வந்தால் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது.

கலைத்துறையினரே! தள்ளிப்போய்க் கொண்டிருந்த வாய்ப்பு இனி தேடி வரும்.

விவசாயிகளே! விளைச்சலை அதிகப்படுத்த மாற்றுப் பயிரிடுங்கள். பூச்சித்தொல்லை விலகும். காய்கறி, பழவகைகளால் லாபமடைவீர்கள். இந்த 2013ஆம் ஆண்டு அவ்வப்போது உங்களை மட்டம் தட்டப் பார்த்தாலும் விடாமுயற்சியாலும் தொலைநோக்குச் சிந்தனையாலும் முன்னேற வைக்கும்.

(தொடரும்...)

# நீதியரசர் மீது நடவடிக்கை எடுக்காவிடின் இறைமையை மீறும் செயலாக அமையும்

## டிலான் பெரேரா



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடாளுமன்றத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கிய இறைமையை மீறும் செயலாக அது அமைந்துவிடும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன் பின்னரும் அவர் குற்றமிழைக்கவில்லையென சில தரப்பினர் கூறி வருகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள், தெரிவுக்குழுவின் அறிக்கை மற்றும் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து அவர் எவ்வாறு நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டட்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிலான் பெரேரா,

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பதில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு போதிய அவகாசம் வழங்கப்படவில்லை, தெரிவுக் குழு விசாரணைகளின் போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அகௌரவமாக நடத்தப்பட்டார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் யாவும் பொய்யானவை.

முன்னாள் நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது அவர் நடத்தப்பட்ட விதத்தைவிட, கௌரவமான முறையிலேயே தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நடத்தப்பட்டார்.

அரசியலமைப்பின் சட்டத்துக்கு அமைய, பிரதம நீதியரசர் ஒருவருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு. அவர் 'குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால், ஒரு மாத இடைவெளியின் பின்னரே அது பற்றிய நாடாளுமன்ற விவாதம் நடைபெறும்.

குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பிரதம நீதியரசர் கௌரவமான முறையில் தானாகவே பதவியிலிருந்து விலகிக் கொள்வதற்காகவே இந்த ஒருமாத காலம் வழங்கப்படுகிறது.

ஆனால், தற்போதையபிரதம நீதியரசர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டபின்னரும் தனது பதவியில் தொடர்ந்து வருவதுடன், வழக்கு விசாரணைகளிலும் கலந்துகொள்கிறார். பதவியிலிருந்து விலகாமல் நெருக்கடி நிலையொன்றை உருவாக்குவதற்கே அவர் முயற்சிக்கின்றார் என்றார்.

# அணுசக்தி நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ரஷ்யாவின் அணுசக்தி நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இலங்கைக்கு சமூக பொருளாதார, வர்த்தகம் உட்பட்ட துறைகளில் உதவிகளை வழங்கும் முகமாகவே இந்தக் குழுவின் விஜயம் அமையவுள்ளது.

1957ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்கவின் அரசாங்க காலத்தில், ரஷ்யாவுடன் உறவுகள் பலப்படுத்திக்கொள்ளப்பட்டன. பின்னர் அது, தொடர்ந்தும் வளர்ச்சிபெற்று 2011ஆம் ஆண்டில் இலங்கையின் தேயிலையை கொள்வனவு செய்யும் பெரிய கொள்வனவாளராக ரஷ்யா இருந்தது. அத்துடன் ரஷ்யா சுற்றுலாப் பயணிகளும் அதிகளவில் கடந்த வருடம் இலங்கைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகர்களிடம் பண மோசடி கெமரூன் பிரஜைக்கு மறியல்

(கொழும்பு)

மஹரகம பகுதியில் இரு வர்த்தகர்களிடம் பண மோசடி செய்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வெளிநாட்டவர் இரு வர்த்தகர்களிடம் 30 இலட்சம் ரூபா பண மோசடி செய்து போலி வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்கியுள்ளார்.

இது குறித்து மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து 31 வயதுடைய கெமரூன் நாட்டு பிரஜை கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# சவுதி பிரஜை ஏமாற்றம்; முகவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கையை சேர்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 11 வீட்டு பணிப் பெண்களை பெற்று தருவதாக தெரிவித்து சவுதி பிரஜையொருவரை ஏமாற்றி 3.2 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொண்ட வெளிநாட்டு தொழிவாய்ப்பு முகவரையே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வெல்லம்பிட்டியை சேர்ந்த லஹிரீன் சைபுதீனையே விளக்கமறியில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் கனிஷ்க விஜேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான சவுதி அரேபிய பிரஜை, தான் இலங்கை முகவரிடம் முழுப் பணத்தையும் செலுத்திவிட்ட போதும் அவர் பணிப்பெண்களை வழங்கத் தவறிவிட்டார் என குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அவர் தனக்கு ஒரு காசோலையை வழங்கிய தாகவும் அந்த காசோலைக்கான வங்கிக் கணக்கில் நிதியின்மையால் அந்த காசோலையும் செல்லுபடியற்றதாகி விட்டது எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# கழித்த பட்டாசு வெடித்து 3 வயது சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் பட்டாசு வெடித்து மூன்றரை வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கடந்த 25ஆம் திகதி முக்குக்குவாவ வெவ பகுதியில் வீட்டு முற்றத்தில் கிடந்த பட்டாசு ஒன்றை எடுத்து சிறுமி கடித்துள்ளார்.

அதன்போது அப்பட்டாசு வெடித்ததால் வாயில் படுகாயம் ஏற்பட்டு சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். பெற்றோரின் உரிய கவனிப்பின்மையால் இவ்வுயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

# கனடிய பிரஜைக்கு உடந்தை; பொலிஸார் தடுப்புக் காவலில்


(கொழும்பு)

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்கு உதவி செய்த பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் சார்ஜண்ட் ஆகியோரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கனடாவைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாத காலப் பகுதியில் விடுதி ஒன்றில் சிறுமி ஒருவருடன் உல்லா சமாக இருந்துள்ளார். இதனையடுத்து பொலிஸாரால் குறித்த வெளிநாட்டு பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் குறித்த சந்தேக நபரை காப்பாற்றுவதற்காக ஐந்து இலட்சத்தை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட வவுனியா பொலிஸ் நிலையத்தின் மகளிர் மற்றும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றும் ஒரு சார்ஜண்டும் சந்தேக நபருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லை என கூறி நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளனர்.

இதனையடுத்து வடமாகாண பொலிஸ் மா அதிபர் ஏ.எச். ஜயவீர வவுனியா நீதிமன்றில் சம்பவம் தொடர்பில் மனுதாக்கல் செய்துள்ளார். குறித்த மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வவுனியா நீதவான் அலெக்ஸ்ராஜா குறித்த பொலிஸாரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# மரண தண்டனை குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை

## கருணாதிலக்க அமுனுகம



(கொழும்பு)

மரண தண்டனையை செயற்படுத்துவது தொடர்பில் இது வரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மரண தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், நடைமுறைப்படுத்தக் கூடாது எனவும் சமூக ஆர்வலர்களால் விவாதிக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அரசாங்கம் மரண தண்டனையை நிறைவேற்றுவது குறித்த தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனையை நீக்குவது தொடர்பில் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் இலங்கை கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வாக்கெடுப்பில் மரண தண்டனையை நீக்குவதற்கு ஆதரவாக 111 நாடுகளும் எதிராக 34 நாடுகளும் வாக்களித்தன. மரண தண்டனை குறித்து இலங்கை தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்ற காரணத்தினாலேயே ஐக்கிய நாடுக்ள் சபையின் வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளவில்லை என கருணாதிலக்க அமுனுகம குறிப்பிட்டார்.

# கொலன்னாவையில் துர்நாற்றம்; பாடசாலைக்கு 3 மாத மூடு விழா

(கொழும்பு)

துர்நாற்றத்தினால் பாடசாலையொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமைலிருந்து மூன்று மாதங்களுக்கு மூடப்பட்ட சம்பவம் ஒன்று கொலன்னாவை கல்வி வலயத்தில் இடம்பெற்றுள்ளது.

கொலன்னாவை ராஹுல வித்தியாலயமே இவ்வாறு மூடப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் வெல்லம்பிட்டிய மீதொட்ட முல்ல பகுதியிலேயே கொட்டப்படுகின்றது.

அந்த குப்பை மேட்டுக்கு அண்மையில் இருக்கின்ற ராஹுல வித்தியாலத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததையடுத்தே குறித்த பாடசாலையில் கல்விப்பயிலும் மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு மாற்றிவிட்டு அந்த பாடசாலையை மூன்று மாதங்களுக்கு மூடிவிடுவதற்கு தீர்மானித்ததாக கொலன்னாவ கல்விவலய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# மகள்மீது வல்லுறவு முயற்சி கணவரை கொன்றார் மனைவி

(கொழும்பு)


மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயன்ற கணவரை, அவரது மனைவி கொலை செய்துள்ளார். தனமல்வில குடா ஓயா சமகிபுர பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிக மதுபோதையில் வீட்டுக்குச் சென்ற குறித்த தந்தை, அதிகாலை 3.00 மணியளவில் தனது 12 வயது மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சித்துள்ளார்.

இதனால் கூச்சலிட்ட மகளை காப்பாற்றுவதற்காக அவரது தாய் முயற்சித்துள்ளார். இதன் போது ஏற்பட்ட முரண்பாட்டில் குறித்த தந்தை உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து கத்தியால் குத்தியதாக குறித்த சிறுமியின் தாயார் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்த குறித்த தந்தை, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட கடையொன்றில் 5 மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட பால்மா பைக்கற்றுகளின் விபரங்களை பின்வரும் வரைபு காட்டுகிறது. வரைபை அவதானித்து பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக.




37. அதிகூடுதலாக விற்பனை செய்யப்பட்ட பால்மா பைக்கற்றுகளுக்கும் குறைவாக விற்பனை ஆகியுள்ள பால்மா பைக்கற்றுகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்னவாகும்?

..........................................


38. குறிப்பிட்ட 2 மாதங்களில் சமளவான விற்பனை நடைபெற்றுள்ளது. அவ்விரு மாதங்களும் யாவை?

..........................................

39. முதல் 3 மாதங்களில் விற்பனையாகியுள்ள பால்மா பைக்கற்றுக்களின் மொத்தம் என்னவாகும்?

..........................................

பின்வரும் உருபை அவதானித்து விடைகளை எழுதுக.




40. உருவில் C இற்கு மட்டும் உரிய பெறுமானம் யாது?

..........................................

41. B இற்கு மட்டும் உரிய பெறுமானம் யாது?

..........................................

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

42. 3 கொப்பிகளின் விலை ரூபா 90, 8 பென்சில்களின் விலை ரூபா 36 ஆகும். 3 பென்சில்களும் 4 கொப்பிகளும் வாங்கும் ஒருவர் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?


..........................................

43. 3 லீற்றர் பாலை 4 சமமான வாளிகளில் நிரப்ப வேண்டுமாயின் ஒவ்வொரு வாளியிலும் நிரப்ப வேண்டிய பாலின் அளவை லீற்றரில் எழுதுக.

..........................................

44. ஒருவர் ரூபா 100 ஐக் கொடுத்து ரூபா 5.50 பெறுமதியான 6 அழிறப்பர்களையும், ரூபா 8.25 பெறுமதியான 8 பேனாக்களையும் வாங்கினார் எனின், அவருக்கு மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

..........................................



உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவில் என்ன பின்னமாகும்?

45. தரப்பட்டுள்ள சம்பவத்தைத் தொடர்ந்து நிகழக்கூடியவற்றைப் பூரணப்படுத்தி 6 வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 4 சொற்களாவது இடம்பெறுவதுடன் எழுவாய், பயனிலை தொடர்புகள் தெளிவாகக் காணப்படுதல் வேண்டும்) மதியம் 2 மணி பாடசாலையை விட்டு நானும் நண்பர்களும் வீடு நோக்கி நடந்து கொண்டி ருந்தோம். திடீரென சூரியனை மறைத்து வானில் கருமேகங்கள் சூழ்ந்தது. காற்றுப் பலமாக வீச ஆரம்பித்தது. சட்டென ஒரு மழைத்துளி என் உடம்பில் விழுந்தது.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 25



S.T.திலக்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) இலங்கையில் கண்டமாலை நோய் அதிகளவுள்ள பிரதேசம் எது?
   1) கிழக்குப் பிரதேசம்   2) மலைநாட்டுப் பிரதேசம்
   3) வடக்குப் பிரதேசம்   4) கரையோரப் பிரதேசம்

2) இரும்புச் சத்துக் குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்
   1) நிறக்குருடு   2) கண்டமாலை
   3) மாலைக்கண்   4) அனிமியா

3) சமைக்காது பச்சையாக உண்ணும் உணவைக் கொண்ட கூட்டம்
   1) பிப்பிஞ்சா, கோவா, தக்காளி, சலாது, வல்லாரை
   2) குறிஞ்சா, கரட், கத்தரி, சோயா, மரவள்ளி
   3) கங்கூன், தூதுவளை, புடோல், கோவா, பப்பாசி
   4) வாழைப்பழம், அப்பிள், பாகல், பூசணி, தக்காளி

4) மஞ்சள் நிறமான காய்கறி, பழவகைகளில் அதிகளவில் அடங்கியுள்ள போசணை
   1) புரதம்   2) இலிப்பிட்டு   3) கல்சியம்   4) விற்றமின் A

5) அரிந்த காய்கறிவகைகளை நீரில் கழுவுவதால், இழக்கப்படும் போசணைக் கூறுகள்
   1) விற்றமின் A யும், C யும்   2) விற்றமின் C யும், D யும்
   3) விற்மின் B யும், C யும்   4) விற்றமின் D யும், E யும்

6) பயிர்ச்செய்கைக்கு தீங்கு ஏற்படுத்தும் சிறு பிராணிகளை இல்லாதொழிப்பதற்குப் பயன்படுத்தும் பாரம்பரிய முறை?
   1) நுளம்புச் சுருள்களை எரித்தல்   2) கிருமிநாசினிகளைத் தெளித்தல்
   3) முசுறு எறும்பின் கூட்டைப்போடுதல்   4) பொலித்தீன் பைகளால் மூடுதல்

7) மாணவன் ஒருவன் வீட்டுத்தோட்டத்திலுள்ள ஒரு தாவரத்தின் கிளையை பொலித்தீன் பையினுள் வைத்து கட்டிய சிறிது நேரத்தின் பின் அவதானிக்கக்கூடியது
   1) உறையிலுள்ளே திரவத்துளிகள் காணப்பட்டன.
   2) உறையின் உள்ளேயும், வெளியேயும் திரவத்துளிகள் காணப்பட்டன.
   3) உறைக்கு வெளியே திரவத்துளிகள் காணப்பட்டன.
   4) உறையின் உட்பகுதியும், வெளிப்பகுதியும் வரண்டு காணப்பட்டன.

8) தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையற்ற காரணி எது?
   1) சூரியஒளி   2) நீர்   3) பசளை   4) பூச்சிகள்

9) வண்ணத்துப்பூச்சி தாவரத்தின் எப்பகுதியில் முட்டையிடும்?
   1) இலைமேல்   2) இலையின் கீழ்
   3) தாவர அடியில்   4) பழங்களின் கீழ்

10) இயற்கையாகவே வேரிலிருந்து கன்றுகள் முளைக்கும் தாவரம் எது?
   1) ஈரப்பலா   2) வாழை   3) பலா   4) விளிம்பி

தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக

11) பூச்சிகளின் உடலை, தலை, நெஞ்சு, வயிறு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (..................)

12) வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாக்க வேண்டும். (..................)

13) பயிர்களுக்கு சேதனப் பசளைகளை இடுவதால் பயிர் செழிப்பாக வளர்வதோடு, மண்ணின் வளமும் கூடும். (..................)

14) அன்றாடம் தேவைப்படும் மரக்கறிவகைகளை வீட்டுத்தோட்டங்களில் உற்பத்தி செய்தல் இலாபகரமானது. (..................)

15) அறுவடை செய்யப்பட்ட மரக்கறி வகைகளை உலர்ந்த, ஈரலிப்பான இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும். (..................)

சரியான விடை எழுதுக.

16) தண்டில் காய்க்கும் மரங்கள் எவை? ..........................................................


17) வேரில் காய்க்கும் மரங்கள் எவை? ..........................................................

18) பருப்புப் பயிர்கள் இரண்டு தருக ..........................................................

19) நிலக்கீழ்த் தண்டைக் கொண்ட பயிர்கள் 2 தருக ..........................................................

20) இலை மூலம் இனப்பெருக்கும் தாவரம் 2 தருக ..........................................................

21)



இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது எது?

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
2. ஸ்ரீலங்கா ரெலிகொம்
3. இலங்கை தபால் சேவை

22) வாழைப் பூவை நாடிவரும் பிராணி எது?

1. வௌவால் 2. வண்ணத்துப்பூச்சி 3. அணில்

23) ஒருவருக்குத் தீ விபத்து ஏற்படும்போது அவ்விபத்துக்குள்ளானவர் உடனடியாகச் செய்ய வேண்டியது?

1. நீர் இருக்கும் இடத்தைத் தேடி ஓட வேண்டும்
2. நிலத்தில் படுத்து உருள வேண்டும்.
3. வேகமாக ஓட வேண்டும்.




24) குமாரின் வயது 15. கமல் குமாரிலும் 7 வயது மூத்தவன். ராஜா கமலிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் ராஜாவின் வயது என்ன?

1. பத்து 2. பதினேழு 3. முப்பத்தி ஒன்பது

25) பேருந்து எரிபொருளாகப் பயன்படுவது.

1. டீசல் 2. மண்ணெண்ணெய் 3. பெற்றோல்


26




அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக்கொள்ளக் கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

1. 7 L 800 ml 2. 6 L 200 ml 3. 5 L 200 ml

27)




பெட்டியினுள் தரப்பட்ட உருவில் A வட்டத்துக்கும் B வட்டத்திற்கும் பொதுவான இலக்கங்கள் யாவை?

**கீழே தரப்பட்ட 28 தொடக்கம் 32 வரையிலான சொற் கூட்டங்களில் ஏனையவற்றில் இருந்து ஒரு சொல் மாத்திரம் வித்தியாசமானது. அச்சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை இடுக.**

28) 1. பாடசாலை 2. மைதானம் 3. ஆசிரியர் 4. கடிதம் (..............)


29) 1. பழம் 2. வேர் 3. காய் 4. பூச்சி (..............)

30) 1. சதுரம் 2. வட்டம் 3. செவ்வகம் 4. முக்கோணம் (..............)

31) 1. வானம் 2. நட்சத்திரம் 3. இரவு 4. சூரியன் (..............)

32) 1. பூசணி 2. புடோல் 3. பாகல் 4. வெண்டி (..............)

33) புகையின் போக்கைக் காட்டப் பயன்படும் இரேகை எது?




34) ஒரு பெட்டியில் 60 பழங்கள் இருந்தன. அதில் தோடம்பழங்களைப் போல் மூன்று மடங்கு மாம்பழங்களும், மாம்பழங்களைப்போல இரு மடங்கு அப்பிள் பழங்களும் இருந்தன எனில் பெட்டியில் இருந்த மாம்பழங்கள் எத்தனை?

1. 36 2. 18 3. 06

35) காகம் ஒன்று தனது அலகில் வடையுடன் அமர்ந்திருந்தது. அவ்வழியே வந்த நரி அதனைக் கண்டது. காகத்திடமிருந்து வடையை அபகரிக்க எண்ணியது. காகையாரே காகையாரே நீர் இனிமையாகப் பாடுவீர். ஒரு பாட்டுப்பாடு என்றது. காகம் வடையைத் தனது கால்களுக்கு இடையே வைத்தபடி கா கா என்று கரைந்தது. நரி வெட்கத்துடன் சென்றது. இக்கதையில் இருந்து புலப்படும் கருத்து யாது?

1. காகம் நரியைக் கண்டால் கரையும்
2. பிறரை வஞ்சிக்க நினைப்பவர்கள் தாமே ஏமாறுவார்கள்
3. நரிக்கு வடை என்றால் மிகவும் விருப்பம்

36) புனித வெள்ளரசு மரக்கிளை நாட்டப்பட்ட இடம்?

1. அனுராதபுரம் 2. பொலநறுவை 3. குருநாகல்

# நித்தியானந்தாவைப் போல பிரமிட் சாமியார்; மன்மத லீலைகள் தொலைக்காட்சிகளில்



(புதுடில்லி)

ஆந்திராவின் பிரபல சாமியார் மீது பாலியல் புகார் எழுந்துள்ளது. சர்வதேச ரீதியான மாநாடு என்ற பெயரில், மாநாட்டை நடத்தி, பெண்களை கட்டி பிடித்தும், சில்மிஷம் செய்ததாகவும் சாமியார் மீது கூறப்படும் புகார்களை விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. நிஜாமாபாத் அருகே உள்ள ஹன்சபள்ளி என்ற இடத்தில் பிரமாண்ட பிரமிட் அமைத்து, தியான மையம் நடத்தி வருபவர் சுபாஷ் பத்ரி, (வயது-65) பிரமிட்டின் உள்ளே அமர்ந்து தியானம் செய்தால் மன அமைதிகிடைக்கும் தீர்க்க தரிசனம் பெறலாம் என்று, கூறி வருகிறார் சுபாஷ் பத்ரி.

கடந்த டிசம்பர் 21 முதல் 31ஆம் திகதி வரை சர்வதேச தியான மாநாட்டை, பிரமிட்டில் கூட்டியிருந்தார் சுபாஷ் பத்ரி. அதில், உலகின் பல நாடுகளில் இருந்து, ஏராளமானோர் பங்கேற்றனர். ஆந்திரா மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் இருந்தும் வி.ஐ.பி.கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில், பெண்களை கட்டி பிடித்து முத்தம் கொடுப்பதும், அவர்களுடன், ''சில்மிஷம்'' செய்வதுமாக, சாமியார் பத்ரி, காம செயல்களில் ஈடு பட்டுள்ளார்.

இதை ரகசியமாக படம் பிடித்த ஒருவர், தெலுங்கு, ''டிவி'' சனல்களுக்கு அந்த காட்சிகளை கொடுத்து ஒளிபரப்ப செய்து விட்டார். அந்த காட்சிகள், தெலுங்கு சனல்கள் பலவற்றிலும் கடந்த செவ்வாய்க்கிழமை ஒளிபரப்பானது. இதனால் அதிர்ச்சி அடைந்த, மகபூப்நகர் மாவட்ட முதல்வர், கிரிஜா சங்கர், சாமியாரின் செயற்பாடுகள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். இதனால், தியான மாநாட்டில் பங்கேற்ற வி.ஐ.பி.கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

# காஸ் சிலிண்டர் வெடிப்பு 3 பேர் உயிரிழப்பு

சென்னை வண்ணாரப்பேட்டையில் நேற்று காலை ஒரு வீட்டில் காஸ் சிலிண்டர் வெடித்ததில் தந்தை மகன் உள்பட 3 பேர் பலியாகினர். 8 பேர் தீக்காயங்களுடன் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வண்ணாரப்பேட்டை போஜராஜன் நகரைச் சேர்ந்தவர் பீஷர் உஷாத், இவர் நேற்று காலையில் வீட்டில் தேநீர் போடுவதற்காக காஸ் அடுப்பை பற்ற வைத்த போது சிலிண்டர் வெடித்தது. இதில் பஷீர் உஷாத் சம்பவ இடத்திலேயே இறந்தார். மேலும் அவரது வீட்டின் சமையலறை சுவர் இடிந்து பக்கத்து வீட்டில் விழுந்தது.

இதில் அந்த வீட்டில் வசிக்கும் தேன்மொழி மற்றும் அவரது மகன் கார்த்திக் ஆகியோரும் பலியாகினர். இவ்விபத்தில் 2 குழந்தைகள் உள்பட 8 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## மரம்...

என் தங்கை வீட்டுக்கு முன் ஒரு நடுத்தர அளவிலான மரம் நின்றது. மிகப் பரந்த நிழல்தரு. கிளிப்பச்சை நிறத்தில் பூவரச இலையின் சாயலில் தேக்கிலை போன்ற பெரிய இலைகளை கொண்டமரம். இளவேனில் காலத்தில் வெள்ளைப் பூக் களை உதிர்க்கும். மாலையில் இதன் நறுமணம் மனதை மயக் கும். அது வீட்டின் முன்கூடத்தின் யன்னலோரம் நின்றதால் உள்ளே ஒளிபுக வழியில்லை. எனவே ஓரிரு கிளைகளை நறுக்குவதென எண்ணியிருந்தோம்.

இரண்டு நாட்களுக்கு முன் அதை அவர்கள் நறுக்கியதாக அறிந்திருந்தேன். காலை நடைப் பயிற்சியோடு சேர்த்து அதையும் பார்த்து வரலாம் என்ற எண்ணத்தில் புறப்பட்டேன். அவர்கள் வீடு என் வீட்டிலிருந்து ஒரு அரைமணி நேரம் நடக்கும் தூரத்திலிருந்தது.

அண்மிக்கும் போதே ஆழ் மனதிருந்து ஒருவித துயரம் என்னை ஆக்கிரமிக்கத் தொடங் கிவிட்டது. அருகில் சென்று மரத்தைப் பார்த்ததும் அதிர்ந்தே போனேன். மரத்தின் அனைத்துக் கிளைகளையும் அடிமரத்துக்கு நெருக்கமாக நறுக்கியிருந்தார்கள். இருபது கரங்களையும் தோளோடு வெட்டி வீழ்த்திவிட்ட பின்பும் எழுந்து நிற்கும் ராவணணின் தோற்றம் என் கண்முன் தெரிந்தது. மரம் உயிர் மூச்சைப் பிடித்தபடி நடுங்கும் குரலில் முனகிக் கொண்டிருந்தது.

எனக்கு குரல் விம்மத் தொடங்கி விட்டது. துயரை அடக்கிக் கொண்டு தங்கை யிடம் விபரம் கேட்டேன். முதலில் ஓரிரு கிளைகளை வெட்டுவதென்றே தொடங்கினார்களாம். ஒவ்வொன்றாக வெட்ட வெட்ட ஆசை விடவில்லை. உற்சாகம் கரைபொங்க அதை வெட்டினால் நன்றாயிருக்கும் இதை வெட்டினால் நான்றா யிருக்கும் என முடிவில் எல்லா வற்றையும் வெட்டவேண்டிய தாயிற்று என்றார்கள்.

மரம் வெட்டுவதாக இருந் தால் என்ன, போர் செய்வதாக இருந்தால் என்ன, ஆயுதங்கள் கைக்கு வரும்வரை தான் மனிதன் மனிதனாக இருக்கிறான். அவை இயங்கத் தொடங்கியபின், அவையே அவனை இயக்கத் தொடங்கிவிடுகிறது. அதை அடக்கத் தெரிநதவன் கலைஞனாகிறன். முடியாதவன் அதன வழிப் போய் அதனூடே மாள்கிறான்.

இது தானே எங்கள் கடந்த காலப்பட்டறிவு.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# ஊர்காவற்றுறை பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2013

**வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013**

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பொருள்களை விநியோகிப்போர் 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று அதனை பூரணப்படுத்தி 31.01.2013க்கு முன் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2013 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்று காட்சிப்படுத்தி தங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**பட வரைஞராக பதிவு செய்தல் - 2013**

2013ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தவர்களும் 31.01.2013ஆம் திகதிக்கு முன்னர் தமது பதி வுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2013**

துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் அவற்றுக்கான 2013ஆம் ஆண்டுக்கான உரிமத்தை 31.03.2013 க்கு முன்னர் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு – 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல்லைக்குள் எந்த ஒரு கட்டுமான வேலைகள் அல்லது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வதாயினும் (வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள், மதில்கள், கடைகள்,திணைக்கள கட்டடங்கள், பாடசாலைகள்,தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் ஏனையவை) பிரதேசசபையிடம் கட்டட விண்ணப்பப்படிவத்தை பெற்று பூரணப்படுத்தி காணி அளவிடைப்படம்(Survey Plan), கட்டட வரைபடம்,காணி உறுதி என்பவற்றுடன் சமர்ப்பித்து பிரதேசசபையின் அனுமதியினை பெற்ற பின்னரே வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டடங்களை அமைப்பதற்கு முன் பிரதேசசபையின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அங்கீகாரம் மேவிய கட்டணம் தண்டப்பணமாக செலுத்த அல்லது கட்டடத்தை அகற்ற நேரிடும்.

பிரதேசசபையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட உரிய காலத்திற்குள் கட்டட வேலைகளை பூர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் கட்டட அனுமதிக்கான காலநீடிப்பினை பிரதேசசபையிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கட்டட வேலைகள் பூர்த்தியானதும் பிரதேசசபையிடம் அனுமதி பெற்ற பின்னரே கட்டடம் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு சான்றிதழை பெறாது புதிய கட்டடம் ஒன்றினை பயன்படுத்துவது குற்றமாகும்.

சட்ட விரோதமான முறையில் அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பில் உரிய நேரத்தில் பிரதேசசபைக்கு அறிவித்து பிரதேச அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

**சூழல் பாதுகாப்பு உரிமம் - 2013**

பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2013 ற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். உரிய உரிமத்தினை பெறத்தவறுபவர்கள் 2013ஆம் ஆண்டு மேற்குறித்த வியாபார/தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்பதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாகப்பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு (அந்தந்த நிறுவனங்களின் பெயர் மட்டும் தாங்கிய விளம்பர பலகை தவிர) 31.01.2013ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தை செலுத்தி சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அனைத்து விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 31.03.2013ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருவதுடன் அனுமதிக்கப்பட்ட விளம்பரங்கள் அனுமதிக்காலம் முடிந்த பின்னர் அகற்றப்படும்.

**வீதி ஒழுங்கை பேணல்**

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்களில் வீதி விபத்தை தவிர்க்கும் நோக்குடன் வீதி ஒழுங்குமுறைகளை அனுசரித்து நடக்குமாறும், வியாபார நிறுவனங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஐந்நூறு மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள்,கடலுணவுகள், இறைச்சிவகைகள்,உயிர்க்கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ/வீதியோரங்களிலோ வைத்து விற்பனை செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்**

சபையின் எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் கட்டி வளர்க்கப்படாத கால்நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபைகள் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை
ம.ஜெயகாந்தன்,
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
04.01.2013
பிரதேசசபை.

தவிசாளர்,
ஊர்காற்றுறை.

(C/2283)

# மாலியில் தளம் அமைக்கும் அல்கொய்தா தீவிரவாதிகள்



உலக நாடுகளை அச்சுறுத்திய பின்லேடனின் தீவிரவாத இயக்கம் தான் அல்கொய்தா. கடந்த 2002ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தை தகர்த்தபின் இந்த தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானின் மலை பகுதியில் உள்ள குகைகளில் பதுங்கினர். இருந்தும் அவர்களை அமெரிக்கா விடவில்லை. நேட்டோ படை உதவியுடன் ஆப்கானிஸ்தானில் புகுந்து அவர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், பாகிஸ்தானில் பதுங்கி இருந்த அந்த இயக்கத்தின் தலைவர் பின்லேடனையும் சுட்டுக் கொன்றது.

இதையடுத்து அந்த இயக்கம் கலகலத்தது. ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தங்க முடியாத சூழ்நிலையில் தற்போது மாலி நாட்டுக்கு தங்கள் இருப்பிடத்தை அல்கொய்தா தீவிரவாதிகள் மாற்றியுள்ளனர். ஏற்கனவே, அங்குள்ள தீவிரவாதிகளின் உதவியுடன் வடக்கு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். அங்குள்ள மலை குகைகள், பாலைவனங்களில் தங்கள் இருபபிடத்தை அமைத்துள்ளனர். அங்கு புல்டோசர் எர்த் மூவர்ஸ் உள்ளிட்ட கனரக எந்திரங்களின் மூலம் பூமியைத்தோண்டி பதுங்கு குழிகள், சுரங்க பாதைகள் போன்றவற்றை பாதுகாப்பாக ஏற்படுத்தியுள்ளனர்.

தங்களுக்கு தேவையான பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள்களை பரல்களில் பதுக்கி வைத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக இங்கு அரசியல் ஸ்திரமற்ற தன்மை நிலவுகிறது. அங்கு கடும் வறுமை நிலை உருவாகியுள்ளது. இதை தங்களுக்கு சாதகமாக்கி கொண்ட தீவிரவாதிகள் மாலியை தங்கள் இருப்பிடமாக மாற்றியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# செல்களின் பெண் விஞ்ஞானி 100ஆவது வயதில் காலமானார்



இரத்தத்தில் உள்ள செல்களை ஆராய்ச்சி செய்து புற்றுநோய்க்கான காரணிகளை கண்டறிய வழிவகுத்த இத்தாலிய நாட்டு பெண் விஞ்ஞானி ரீட்டா லெவி மோண்டால்சசினி நேற்று காலமானார்.

இத்தாலி நாட்டின் உள்ள வடக்கு தூரின் பகுதியில் 1909ஆம் ஆண்டு வசதியான யூத குடும்பத்தில் பிறந்தவர் ரீட்டா மெலவி மோண்டால்சினி. கல்லூரிப்படிப்பை முடித்து மருத்துவ பட்டம் பெற்ற போதும் மருத்துவ ஆராய்ச்சியை தொடரவிடாமல், இத்தாலிய பாசிஸ்ட் அரசு அவருக்கு தடை விதித்தது.

இந்த தடையையும் மீறி இரத்தத்தில் உள்ள செல்களை பற்றி அவர் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

அமெரிக்காவின் உயிரியல் ஆராய்ச்சியாளர் ஸ்டான்லி கோஹன என்பவருடன் இணைந்து நடத்திய புற்றுநோய் ஆராய்ச்சிக்காக, 1986ஆம் ஆண்டு உலகின் உயரிய விருதான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இவரது ஆராய்ச்சிக்கள் மருத்துவ உலகுக்கு கொடையாக மாறிய பின்னர், இத்தாலியின் உயர்ந்த ஆராய்ச்சியாளராக கௌரவப் படுத்தப்பட்டார்.

இவர் 100 வயதை கடந்த நிலையிலும் தொடர்ந்து மருத்துவ ஆராய்ச்சியிலேயே தனது கவனத்தை செலுத்தி வந்தார்.

இந்நிலையில் நேற்று உறங்கிய நிலையிலேயே காலமானார்.

# இரத்தக் காடாக மாறிய சிரியா; இதுவரையில் 46 ஆயிரம் பேர் உயிரிழப்பு



சிரியாவில் உள்நாட்டு போருக்கு இதுவரையிலும் 46 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது.


சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெடித்த போராட்டம் இன்னும் ஓயவில்லை.

இராணுவத்தினர் மூலம் அப்பாவி பொதுமக்கள் உட்பட புரட்சிப்படையினரை கொன்று குவிக்கிறார் அசாத்.

இந்த உள்நாட்டு போரில் இதுவரையிலும் 46 ஆயிரம் பேர் பலியானதாக சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் 2011ஆம் ஆண்டில் 6,548 பேரும், 2012ஆம் ஆண்டில் 39,520 பேரும் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் வ[illegible] முறை தொடரும் பட்சத்தில், ஒரு இலட்சம் பேர் வரை உயிரிழக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவரின் விரலை பிடித்தவாறே கருவிலிருந்து வெளியே வந்த சிசு



மருத்துவரின் விரலை பிடித்தவாறு தாயின் வயிற்றிலிருந்து வெளியேவந்த சிசுவின் படம் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ராண்டி அட்கின்ஸ்- அலிசியா அட் கின்ஸ் தம்பதிக்கு, கடந்தாண்டு நவம்பர் மாதம் அழகான பெண் குழந்தை பிறந்தது.

இக்குழந்தைக்கு நிவியா என பெயரிட்டுள்ளனர். மனைவிக்கு பிரசவம் நடந்த போது, ராண்டி உடனிருந்தார்.

அப்போது தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த குழந்தை, மருத்துவரின் கை விரலை அழகாக பிடித்துக்கொண்டிருந்தது.

இதைப்பார்த்து ஆச்சரியமடைந்த மருத்துவர், இது குறித்து ராண்டியிடம் தெரிவிக்க அவரும் அதை படம் பிடித்தார்.

தற்போது இந்த படம் வெளியிடப்பட்டுள்ளது. படத்தைப் பார்த்த பலரும் ஆச்சரியத்தில் உறைந்து போயுள்ளனர். மேலும், படத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.


# ஜேர்மனியில் மூடு பனி; விபத்துக்கள் 3பேர் பலி

உல்ம் நகரத்தின் தென் பகுதியில் டீ30 நெடுஞ்சாலையை மூடுபனி மறைத்ததால் எதிரெதிரே வந்த 12 கார்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.

உயிரிழந்தவர்களில் இருவர் 80 வயதான தம்பதியர், மற்றொருவர் 20 வயது இளைஞர், இவர் பிபராக்கிலிருந்து அதிகாலை 1 மணிக்கு காரில் வந்து கொண்டிருந்தார்.

மூடுபனி சாலையின் குறுக்கே நிறைந்து காணப்பட்டதால், கார்கள் விபத்துக்கு உள்ளாக்கி நிற்பதை பின்பு வந்த எவராலும் பார்க்க இயலவில்லை என்றார் காவல்துறை செய்தித்தொடர்பாளர்.

# ஈரானின் புதிய ஏவுகணை சோதனை



போர்க் கப்பல்களை தாக்கும் அதி நவீன ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக பரிசோதித்தது.

இதுகுறித்து ஈரான் அரசு வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானின் கப்பற்படை பயிற்சி கடந்த ஐந்து நாட்களாக நடந்தது. இதில் பல்வேறு ஆயுதங்களின் பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் கடைசி நாளில் 200 கிலோமீற்றர் இலக்கை தாக்கும் கேதர் என்ற அதிநவீன ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்டது. இந்த பரிசோதனை வெற்றியில் முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் ஈரான் தன்னுடைய இராணுவ வலிமையை காட்டுவதற்காகவே பரிசோதனையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோதமான உரிமை; வியட்நாமை எச்சரித்தது சீனா

தென் சீனக்கடலில் உள்ள ஜிஷா, நன்கா தீவுகள் சீனாவுக்கு சொந்தமானவை, அவற்றை உரிமை கொண்டாடுவது சட்டவிரோதமானது என்று வியட்நாமுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த இரு தீவுகளும், சீன அதிகார வரம்புக்கு உட்பட்டவை. அத்தீவுகள் மற்றும் அவை சார்ந்த கடல் பகுதி தொடர்பாக எந்தவொரு நாடும் உரிமை கோரினால் அது செல்லத்தக்கது அல்ல என்பதோடு சட்ட விரோதமானதும் கூட என்று தெரிவித்துள்ளது.

சீனாவால் ஜிஷா, நன்ஷா என அழைக்கப்படும் தீவுகளை, வியட்நாம் பாராசெல் தீவுகள் என அழைக்கிறது. அத்தீவுகள் தனக்கு சொந்தமானவை என உரிமை கொண்டாடும் வியட்நாம் இது தொடர்பாக கடந்த ஜூன் மாதம் 'வியட் நாமிய கடல் சட்டம்' என்ற புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளது.



# கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்குமா பிரிட்டன்?

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடம் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில், பங்கேற்பதா என்பது குறித்து பிரித்தானிய அரசாங்கம் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லையென இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி கருத்து வெளியிட்டுள்ள அவர்,

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதாக இருந்தால், பிரித்தானியா எத்தகைய மட்டத்தில் பிரதிநிதிகளை அனுப்பும் என்பதை இப்போதே கூற முடியாது.

ஏனைய கொமன்வெல்த் நாடுகளைப் போன்றே இலங்கையையும் பிரித்தானியா அவதானிக்கும்.

மனித உரிமைகள், நல்லாட்சி போன்ற கொமன்வெல்த்தின் பண்புகளை இலங்கை எவ்வாறு மதிக்கிறது என்பதை பிரித்தானியா கண்காணிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விகாரமடைந்த வாழைப்பொத்தி

(வடமராட்சி)

ஊரிக்காடு வீதி, வல்வெட்டி பகுதியில் உள்ள சின்னராசா என்பவரது வீட்டிலுள்ள வாழைக் குட்டியில் மேற்புறமாக நாக பாம்பு வடிவத்தில் வாழைப் பொத்தி வந்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



சிறிய வாழைக்குட்டியில் வாழைப்பொத்தி நாகபாம்பு வடிவத்தில் காணப்படுவதை பல எண்ணிக்கையான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். வீட்டு உரிமையாளர் இதற்கு பூ வைத்து வழிபாடுகளைச் செய்து வருகிறார். (116)

# சொந்த மண்ணில் தொடரை பறிகொடுத்தது இந்தியா

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் நேற்று நடந்த இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றதன் மூலம் எளிதாக தொடரை வென்றது.





கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தெரிவுசெய்தது.

இதையடுத்து, களமிறங்கிய பாகிஸ்தான் தொடக்க வீரர்கள், நஸீர் ஜாம்ஷெத் மற்றும் ஹபீஸ் ஜோடி இந்திய பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் ஜம்ஷெத் மீண்டும் சதம் அடித்து அபார திறமையை வெளிப்படுத்தினார்.

அவர் 120 பந்துகளில் 12 பவுண்டரிகள், இரண்டு சிக்சர்களுடன் இந்த இலக்கை எட்டினார்.

சென்னைப் போட்டியிலும் சதம் விளாசிய ஜம்ஷெத், சர்வதேச போட்டிகளில் மூன்றாவது சதத்தைப் பதிவு செய்தார்.

இந்த மூன்று சதங்களையும் இந்தியாவுக்கு எதிராக அவர் அடித்துள்ளார். பின்னர் 106 ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் அவர் டோனியால் ஸ்டம்பிங் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

முன்னதாக ஹபீஸ் 76 ஓட்டங்களில் அவுட்டானார். பின்னர் இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் வீரர்கள் தொடர்ந்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

இறுதியில் 48.2 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 250 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய தரப்பில் இசாந்த் சர்மா மற்றும் ஜடேஜா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 251 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

முதலில் ஆடிய சேவாக், காம்பீர் ஜோடி 41 ஓட்டங்கள் வரை நிலைத்து நின்று விளையாடியது.

பாகிஸ்தான் வீரர் ஜுனைத் கான் பந்தில் 11 ஓட்டங்களுடன் காம்பீர் அவுட்டாகி வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து விராத் ஹோலி 6, சேவாக் 31, யுவராஜ் 9, ரெய்னா 18 ஓட்டங்களுடன் வெளியேறினர். ஆட்டத்தின் இறுதியில் இந்திய அணி 165 ஓட்டங்களுடன் தனது சொந்த மண்ணில் தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியில் ஜுனைத் கான், உமர் குல் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். சயீத் அஜ்மல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக நஸீர் ஜாம்ஷெத் தெரிவானார்.

## மின்வயர்...

சேர்ந்தவரும் தற்போது மேற்படி கிராமத்தில் வசித்துவருபவருமான செல்வநாயகம் றொபேட் (வயது - 23) என்பவரே பலியானவராவார்.

இக்கிராமத்திற்கு மின்சார விநியோகம் சீரற்ற நிலையில் காணப்படுவதுடன் ஓரிரு வயர்க் கம்பிகள் மூலமே மின்சார விநியோகம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் இவ்வயர்க் கம்பிகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதாகவும் இது தெரியாது இளைஞனின் உறவினர் ஒருவர் கம்பியில் துணி காயப்போட முற்பட்ட சமயம் இளைஞன் கிணற்றடியில் நின்றுள்ளார். இச்சமயத்தில் கம்பி அறுந்து இளைஞன் மேல் விழுந்துள்ளதாகவும் தண்ணீரில் நின்ற இளைஞன் மின்தாக்கத்தால் ஸ்தலத்தில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞனின் சடலம் விசாரணைக்காக முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில் விசாரணை முடிந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கே)

## வல்லுறவின்...

கோரியுமே இந்த அமைதிவழி ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

மண்டைதீவு ரோஜாவனம் சிறுவர் கழகமும் யாழ். மாவட்ட சிறுவர் கழகமும் இணைந்து நடத்திய இந்த அமைதிவழி ஊர்வலம் மண்டைதீவு பேதுருவானவர் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகியது. ஊர்வலத்தின் முன்பாக பேதுருவானவர் முன்பள்ளி சிறார்கள் சம்பவத்தை வெளிப்படுத்தும் பதாதைகளை கையில் ஏந்தியவாறு கலந்துகொண்டனர்.

தீவக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேசசபைத் தவிசாளர், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் என பெருமளவானவர்கள் இந்த அமைதி ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டனர்.

புனித பேதுருவானவர் தேவாலயத்தில் இருந்து நகர்ந்த ஊர்வலம் தெற்கு வீதியூடாக மண்டைதீவிலுள்ள வேலணை பிரதேச சபை உப அலுவலகத்தை அடைந்து, வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசாவிடம் மண்டைதீவு ரோஜாவனம் சிறுவர் கழகத் தலைவர் தனுசன் மகஜரைக் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து நகர்ந்த ஊர்வலம் மண்டைதீவிலுள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் உப அலுவலகத்தை அடைந்தது.

அங்கு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜிப்றியிடம் முன்பள்ளி சிறார் ஒருவர் மகஜரின் பிரதியைக் கையளித்தார். தொடர்ந்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா, தீவகத்தில் நிலவும் சிறுவர் வன்முறைக்கெதிராக குரல் கொடுப்பதோடு தீவக மக்களின் மௌனம் கலைய வேண்டும் என்றும் தெரிவித்ததுடன், காலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னிடம் தொடர்புகொண்டு குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரிளுடன் தொடர்புகொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததாகவும் அத்துடன் இவ்வாறு குற்றம் புரிந்தவர்கள் யாராக இருப்பினும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு அதிகூடிய தண்டனை வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் தமது ஆதரவையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கருத்துத் தெரிவிக்கையில், நடைபெற்ற இந்தச் சம்பவம் நிச்சயமாக மண்டைதீவைச் சேர்ந்தவர் ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பொதுமக்களிடத்திலிருந்து தகவல் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

பொதுமக்கள் தமக்குத் தெரிந்த தகவல்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டும். அதன்மூலம் குற்றவாளியைக் கைதுசெய்து நீதியின் முன்நிறுத்தி தண்டனை வழங்கமுடியும் என்று தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பங்கேற்று யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கான மகஜரைப் பொறுப்பேற்று கருத்துத் தெரிவித்த மண்டைதீவுக்குரிய பங்குத்தந்தை குயின்டஸ் இந்தச் செயலைச் செய்தவர் மனித அறிவிற்கு அப்பாற்பட்டவராக இருக்கமுடியும்.

இன்று போதைவஸ்து, மதுபானம் என்பவற்றைப் பாவிப்பவர்கள் எதையும் செய்துவிடலாம் என்ற நிலையில் குற்றங்களைப் புரிந்த தண்டனை அனுபவித்ததன் பின்னரும் மீண்டும் குற்றங்களைப் புரிவது அதிகரித்துள்ளது.

இதனால் வாழ்க்கையை இழந்தவர்கள் இத்தகைய கொடூரத் தன்மையான செயல்களைப் புரிந்துவருகின்றனர். இவ்வாறு செயற்படுபவர்களினால் நாட்டுக்கு கேடே ஏற்படும். இந்நிலையினை எந்தவொரு தரப்பினரும் பொறுத்துக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்த அமைதி ஊர்வலத்தில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் கலந்துகொண்டிருந்தனர். (பா,02,05)

## யாழ். பல்கலை...

ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் அமைச்சு அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படாதிருக்கும் முகமாக யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

## 2014 இல்...

விக்கிரமசிங்க, நேற்று ரோம் நகருக்கு சென்றிருந்தார். அங்கு ஐ.தே.க ஆதரவாளர்களைச் சந்தித்து உரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த ஆண்டில் பல்வேறு முன்னேற்ற வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. அத்துடன், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நீதிமன்றத்தின் சுயாதீனம் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்தல் தொடர்பில் ஆர்ப்பாட்டங்களை ஐ.தே.க நடத்தும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

## நீதிமன்ற...

ஆராய்ந்து அதன் பின்னர் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளியிடும். இது ஓர் புதிய திருப்பமாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் இரண்டு பிரதம நீதியரசர்கள் மற்றும் நீதியரசர்களுக்கு எதிராக நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அந்தத் தீர்மானங்களுக்கு எதிராக சவால் விடுக்கப்படவில்லை.

நீதிமன்றின் தீர்ப்புக் குறித்து தற்போதைக்கு கருத்து வெளியிடுவது பொருத்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான அரசாங்கத்தினால் அப்போதைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான அனுர பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்தன மற்றும் சரத் முத்துவேகம ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த மூன்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென பரிந்துரை செய்திருந்ததனை ஊடகவியலாளர் ஒருவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், தற்போது அவை தொடர்பில் தீர்மானிக்கும் காலம் கடந்து விட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

## வர்த்தக நிலையத்துக்கு காப்புறுதிப்பணம் கிடைத்தது

(வடமராட்சி)

மின்ஒழுக்குக் காரணமாக தீயில எரிந்து சேதமாகிய வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நட்டஈடு வழங்கியுள்ளது.

நெல்லியடி பொதுச்சந்தையில் காணப்பட்ட ஆஷா ரேடர்ஸ் என்ற இந்த வர்த்தக நிலையத்திற்கே இந்த நட்டஈடு கிடைத்துள்ளது. நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். அகிலதாஸ் மேற்கொண்ட முயற்சியால் இந்த நட்டஈடு விரைவாக பெற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

## அமைச்சர்...

தலையீடு செய்யக்கூடாது என தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அமைச்சர் யாப்பா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த மிரட்டல் தொடர்பில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அனைத்திலும் உயர்ந்தது நாடாளுமன்றம் அரசின் கருத்தை ஏற்கமுடியாது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாடாளுமன்ற செயற்பாடுகளே கேலிக்கூத்தாக இருக்கும் போது, நாடாளுமன்றம் தான் அனைத்திலும் உயர்ந்தது என்று அரசு கூறுவதை ஏற்க முடியாது எனவும், நாடாளுமன்ற வழிமுறைகள் இலங்கையில் மதிக்கப்படுவது இல்லை எனவும் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதம நீதியரசரைத் தேடிச் சென்று வேட்டையாடும் ஓர் அணுகுமுறையை இந்த அரசாங்கம் பின்பற்றி வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பிரேரணை சமர்ப்பிப்பு, நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணை ஆகிய அனைத்து நடவடிக்கைகளையும் ஜே.வி.பி. முற்று முழுதாக நிராகரிக்கின்றது.

பிரதம நீதியரசர் நீதிமன்றத்தை எதிர்நோக்காமல் அவரை பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது என்றும், பிரதம நீதியசருக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகளிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# இந்தோனேஷிய கடலில் தத்தளித்த இலங்கை புகலிடதாரிகள் மீட்பு

இந்தோனேஷிய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவிற்கு படகு மூலம் பயணம் செய்ய முற்பட்டவர்களே இவ்வாறு இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவுகளில் தத்தளித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

46 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

சுமத்திரா தீவுகளிலிருந்து 330 கடல் மைல் தொலைவில் குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்த படகு இயந்திரக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களாக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள், இந்தோனேஷிய அதிகாரிகளின் உதவியை முதலில் நிராகரித்திருந்தனர்.

இந்தோனேஷியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டதாக அவுஸ்ரேலிய அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடுப்பகுதி முதல் இதுவரையில் 6500 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளனர். 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 13 ஆம் திகதி முதல் இதுவரையில் 832 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

# பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரமாக்க ஏற்பாடு

அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை ஒருவருட பயிற்சிக் காலம் நிறைவடைந்ததும் அடுத்த மாதததில் இருந்து சேவையில் நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயிலுநர் பட்டதாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஒரு வருடம் பூர்த்தியடைகின்ற நிலையில் அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட உள்ளதாகப் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர் பட்டதாரிகள தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட பல அமைச்சுகளில் சேவையாற்றுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 51 ஆயிரத்து 500 பட்டதாரி பயிலுநர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமை சவாலிலிருந்து மீள அரசிடம் திட்டமெதுவும் இல்லை

## கண்டிக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டின் போது, இலங்கைக்கு எதிராக சில யோசனைகள் முன்வைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் எனினும் அந்தச் சவாலில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் எந்த முயற்சிகளையும் மேறகொள்ளவில்லை எனவும் சர்வதேச ரீதியில் இலங்கையை மேலும் நெருக்குதலுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகளை மீறும் நாடு என உலகில் உள்ள பல நாடுகள் இலங்கை மீது குற்றம் சுமத்தி வருகின்றன. பொதுநலவாய நாடுகளின் தலைவர் கலந்துகொள்ளும் உச்சி மாநாடு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதன் இணக்கப்பாடுகளை மீறி, அந்த மாநாட்டை எதிர்கொள்ள வேண்டிய ஆபத்து இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாகவும் பல நாடுகள் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் மோசடியான நாடுகளில் இலங்கை முன்னணியில் இருக்கும் நாடாக மாறியுள்ளது. எந்த அடிப்படை செயற்பாடுகளும் இன்றி இருப்பதால், இலங்கை இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளது. நாட்டில் காணப்படும் ஊழல், மோசடிகளை குறைக்க அரசாங்கம் கடந்த சில வருடங்களில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய அரசியல் வாதிகளுக்கு அரசாங்கம் அடைக்கலம் கொடுத்து வருகிறது. இந்த நிலையில், இணையத்தளத்தில் பாலியல் தளங்களை அதிகளவில் தேடும் நாடாகவும் இலங்கை மாறியுள்ளது எனவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# கையிருப்பில் உள்ள நெல்லை விற்பனை செய்ய தீர்மானம்



அரசாங்க கையிருப்பிலுள்ள நெல்லினை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போக நெல் கொள்வனவிற்காக களஞ்சியங்களைத் தயார்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ.சகலசூரிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நெல் தொகையை அரிசியாக மாற்றுவதற்காக ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.


அரசாங்கத்தின் கையிருப்பில் சுமார் ஒரு இலட்சம் மெட்ரிக்தொன் நெல் உள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் திறைசேரி பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த தினங்களில் எற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்புக்குள்ளான வயல்களை இரண்டு மாதங்கள் முன்கூட்டியே பண்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

உரிய காலத்திற்கு முன்னதாக அறுவடையை மேற்கொள்வதன் ஊடாக செய்கை பாதிப்பை எதிர்நோக்கியிருந்த விவசாயிகளுக்கு பொருளாதார நீதியாக நிவாரணம் கிட்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தென்பகுதியைச் சேர்ந்தவர் ஏ-9 வீதி விபத்தில் பலி



ஏ-9 வீதியில் புத்தூர் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த தென்பகுதியைச் சேர்ந்த ஒருவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காலியைச் சேர்ந்த டபிள்யூ. நிக்சன் (வயது - 40) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீதி திருத்தப்பணியில் ஈடுபட்டுவரும் தனியார் நிறுவனமொன்றில் இவர் பணியாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11,பா)

# பிரதம நீதியரசரின் ரிட்மனு 15 ஆம் திகதி ஒத்திவைப்பு



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ரிட் மனுவை ஜனவரி 15 ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த ரிட் மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை ஒத்திவைத்தது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோரை நீதின்மன்றத்தில் நேற்று ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி அறிவிப்பு விடுத்திருந்தமை குறிபபிடத்தக்கது.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவுக்கு எதிராக இடையீட்டு மனுவொன்று நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசரின் ரிட் மனுவை செல்லுப்படியற்றதாக்க வேண்டும் என கோரியே இந்த இடையீட்டு மனுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்க சம்மேளனம் தாக்கல் செய்துள்ளது.

# மேன் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு; அதிருப்தியடையும் அமைச்சர் விமல்

மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பானது கள்வனின் தாயிடம் மை வெளிச்சம் பார்ப்பதற்கு நிகரானது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றிடம் சட்ட வரைவிலக்கணம் கோரும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நீதிமன்றக் கட்டமைப்பை தன்வசப்படுத்தியுள்ளார்.

சுயலாப நோக்கங்களுக்காக நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயறபடுகின்றார். குற்றவியல் பிரேரணை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரையில் பதில் பிர தம நீதியரசர் ஒருவரை நியமிப்பது பொருத்தமானது. பிரதம நீதியரசர் நாட்டின் அரசியலமைப்பை உதாசீனம் செய்யும் வகையில் செயற்படுகின்றார். சர்வதேச சக்திகளை திருப்திபடுத்தும் வகையில் நாட்டுக்கு எதிராக பிரதம நீதியரசர் செயற்பட்டு வருகின்றார். எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இல்ங்கைக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் முயற்சியின் ஓர் கட்டமாக பிரதம நீதியரசரின் நடவடிக்கைகளை கருத முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

## தரம் 5புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி 7 இல்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் எதிர்வரும் 7 ஆம் தகிதி வெளியிடப்பட உள்ளது. சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வெட்டுப் புள்ளிகளே எதிர்வரும் 7 ஆம் திகதி வெளியிடப்பட உளளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். தமிழ்மொழி மூல மாணவர்களின் வெட்டுப்புள்ளிகள் நான்கு நாட்கள் தாமதமாகியே வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.